விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: எட்டு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 வைகாசி 15 திங்கட்கிழமை (29.05.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 161

ராம்கோ RAMCO

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.

ராம்கோ சீமெந்து

## இலங்கை விவகாரத்தில் புதிய திருப்பம்

# இனப்பிரச்சினைக்கான தீர்வை வெளிநாடுகளே முன்வைக்கும்

### சர்வதேச ஆய்வாளர்கள் கருத்து

(ஒஸ்லோ)

**இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டத்தை வெளிநாடுகள் தயாரிக்கவுள்ளதாக சர்வதேச அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.**

வெளிநாடுகளால் தயாரிக்கப்படும் தீர்வுத்திட்டத்தை அரசு -விடுதலைப்புலிகள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என பிரஸ்தாப நாடுகள் வலியுறுத்தும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நோர்வேயின் அனுசரணைப்பணி மூலம் அரசும் விடுதலைப்புலிகளும் ஓர் இணக்கப்பாடான தீர்வுத்திட்டத்தை எட்டாத நிலையில் இலங்கை இனப்பிரச்சினையை முடிபுக்குக் கொண்டு வரும் வகையில் பொருத்தமான தீர்வுத்திட்டம் ஒன்றை நோர்வே ,யப்பான் ,இந்தியா,அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் தயாரிக்கவுள்ளதாகவும் இதன் ஒரு கட்டமாகவே அடுத்த மாதம் 8-ம், 9-ம் திகதிகளில் நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் மாநாடு (08 ஆம் பக்கம் பார்க்க)

## தொலைத் தொடர்பகத்திற்குள் நுழைந்து துப்பாக்கிச் சூடு-இருவர் பலி

### வட்டுக்கோட்டையில் சம்பவம்

(பொன்னாலை)

வட்டுக்கோட்டை மூளாய் வீதியில் உள்ள கிருஷ்ணா தொலைத் தொடர்பகத்தில் நேற்று மாலை 4.30 மணியளவில் திடீரென நுழைந்த இனந்தெரியாதவர்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இருவர் பலியாகினர்.

வட்டு.காளிகோவிலடியைச் சேர்ந்த அமிர்தலிங்கம் சபேசன் (வயது 26) சம்பவ இடத்திலும், மூளாய் வீதியைச் சேர்ந்த விமல சூரியர் கேகலராஜ் (வயது 23) என்பவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னரும் பலியாகினர்.

இரண்டு துவிச்சக்கர வண்டியில் வந்த இனந்தெரியாத நபர்கள் பிரஸ்தாப தொலைத் தொடர்பகத்திற்குள் நுழைந்து கதவுகளை பூட்டி விட்டு அங்கு நின்ற இருவரினதும் கை, கால்,முகங்களை துணியால் கட்டி விட்டு துப்பாக்கிப்பிரயோகம் செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (ந-5,49)

## இலங்கையில் நிலைமை மோசமடைந்து வருகிறது

### எரிக்சொல் இந்தியாவில் தெரிவிப்பு



இலங்கையில் இடம் பெற்றுவரும் வன்முறைகளினால் நிலைமை மோசமடைந்து வருவதாக நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக்சொல் ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இடம் பெறும்அமைதி முயற்சிகள் குறித்து புதுடில்லியில் மத்திய அரசிடம் நோர்வேக்குழுவினர் விளக்கமளித்துள்ளதாகவும் கூறிய எரிக்சொல் ஹெய்ம் டோக்கியோவில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் இணைத் தலைமைநாடுகளின் கூட்டத்தில் இலங்கையில் அமைதியை ஏற்படுத்தக்கூடிய தீர்மானங்கள் குறித்து ஆலோசிக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார். (ந-5)

## யாழ்.பல்கலைக்கழகத்திற்கு பதில் துணைவேந்தர் ஜூன் 2 இல் நியமனம்

(கொழும்பு)

துணைவேந்தர் நியமனத்தால் யாழ்.பல்கலைக்கழகத்தில் ஏற்பட்டுள்ள நிர்வாகச்சிக்கல்களுக்கு எதிர்வரும் ஜூன் 2-ம் திகதி முடிபு காணப்படும் என பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எதிர்வரும் ஜூன் 2-ம் திகதி யாழ்.பல்கலைக்கழகத்தின் தற்போதைய நிலை குறித்து பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு ஆராயவுள்ளதாக வும்,

அதில் முதற்கட்டமாக பதில் துணைவேந்தர் ஒருவரை நியமிக்கவுள்ள தாகவும் மானிய ஆணைக்குழு வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

இதேவேளை யாழ்.பல்கலைக்கழக துணை வேந்தராக நியமிக்கப்பட்ட பேராசி ரியர் ரட்ணஜீவன் கூல் 6 மாத விடுப்பில் வெளிநாடு சென்றுள்ளமையும் குறிப்பிடத் தக்கது. (ந)

## 18 லொறிகள் முகமாலையில் தடுத்துவைப்பு

(யாழ்ப்பாணம்)

முகமாலைச் சோதனைச் சாவடியூடாக வெடிபொருட்களைத் தயாரிக்கும் இரசாயனங்களை கொண்டு சென்ற 18 லொறிகளை இராணுவத்தினர் தடுத்து வைத்துள்ளதாக இராணுவ ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

நேற்று பிற்பகல் 1.20 மணியளவில் கைப்பற்றிய இந்த வாகனங்களில் இருந்து அதி சக்திவாய்ந்த வெடிபொருட்க்ள் மீட்கப்பட்டுள்ளதாகவும் இராணுவ ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த லொறிகள் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்ததென்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை குறித்த லொறி உரிமையா ளர்கள் தமது லொறிகளில் பொருட்களை ஏற்றி வந்ததாகவும் அநாவசியமின்றி இராணுவத்தினர் அவற்றை தடுத்து வைத்துள்ளதாகவும் யாழ்.அரச அதிபரிடம் முறையிட்டுள்ளனர். (ந-5)

## ம.உ.ஆ.இணைப்பதிகாரிக்கு கொலைப் பயமுறுத்தல்

### பாதுகாப்புக் கருதி யாழில் இருந்து வெளியேறினார்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இணைப்பதிகாரி றோகித பிரியதர்சனவுக்கு தொலைபேசி மூலம் கொலை பயமுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அல்லைப்பிட்டியில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவத்திற்கு பின்னர் கடந்த 20 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் பயன்படுத்தப்படாத தோட்டா ஒன்றை தபால் உறையில் வைத்து தன்னிடம் ஒப்படைக்குமாறு மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவர் காவலாளியிடம் ஒப்படைத்து விட்டுச் சென்றதாகவும்;

அதனைத் தான் பொலிஸாரிடம் கையளித்ததாகவும் தெரிவித்த இணைப்பதிகாரி றோகித பிரியதர்சன அதனைத் தொடர்ந்து தொலை பேசி மூலம் தனக்கு கொலை பயமுறுத்தல் விடுக்கப்பட்டு வந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இச் சம்பவங்களையடுத்து யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இணைப்பதிகாரி றோகித பிரியதர்சன யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறியுள்ளார்.(ந-5)

# சமாதான நீதவான் பதவிக்கு களங்கம் ஏற்படுத்துவோர் மீது நடவடிக்கை !

(கொழும்பு)

சமாதான நீதவான் எனும் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் சமாதான நீதவான்களை பதவியிலிருந்து நீக்கி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக நீதி அமைச்சர்அமரசிறி தொடங்கொட தெரிவித்துள்ளார் .

இவ்வாறு சமாதான நீதவான் எனும் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்திய பதினாறு சமாதான நீதவான்கள் கடந்த சில நாட்களுக்குள் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

சமாதான நீதவான்கள் சிலர் பொதுமக்களின் தேவைகளை நிறைவேற்றிட பணம் பெற்றுக் கொண்டமை அரச அதிகாரிகளின் கடமைகளுக்கு குந்தகம் ஏற்படுத்தியமை மற்றும் தகுதியற்றவர்களுக்கும் சட்ட விரோத செயல்களில் ஈடுபடுவோருக்கும் சான்றிதழ்கள் வழங்கியமை குறித்து தமக்கு பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக குறிப்பிட்ட அமைச்சர் தற்போது பதவிநீக்கம் செய்யப்பட்டுள்ள சமாதான நீதவான்களில் ஒருவர் ஹெரோயின் விற்பனையில் ஈடுபட்டுள்ளதாகவும் பொலிஸார் அவருக்கு எதிராக பதினேழு வழக்குகளை தொடர்ந்துள்ளனர் என்றும் கூறினார் . இதனால்சமாதானநீதவான்பற்றிய விவரங்களை திரட்டுவதற்கு தனது அமைச்சில் விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டிருக்கின்றது என்றும் அமைச்சர் தெரிவித்துள் ளார்.

அத்துடன் எதிர்காலத்தில் சமாதான நீதவான்களை நியமிக்கும் பொழுது அவர்களுடைய கல்வித் தகைமைகள் பொதுமக்கள் தொடர்பு சமூகசேவைகள் என்பனவும் கவனத்தில் கொள்ளப்படும்.

சமாதான நீதவான் எனும் கௌரவமான பதவியை வைத்துக்கொண்டு பணத்திற்கு சோரம் போகும் சகல சமாதான நீதவான்களும் உடனடியாக பதவிநீக்கம் செய்யப் படுவார்கள் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (க-9)

## மல்லாகத்தில் புதியமுகாம்

மல்லாகம் காங்கேசன்துறை வீதியில் இராணுவத்தினர் புதிய முகாம் ஒன்றை அமைத்து வருகின்றனர். மல்லாகம் சந்தியிலிருந்து 250 மீற்றர் தூரத்தில் இந்த முகாம் அமைக்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை புதிய முகாம் அமைக்கப்பட்டு வரும் முகாம் அமைக் கும் பகுதியில் இருந்த முதியவர்கள் படையினரால் வெளியேற்றப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. (க)

சிறு விளம்பரம்

SPOKEN ENGLISH

ஓய்வுபெற்ற உத்தியோகத்தரினால் வீடுகளுக்கு வந்து குறுகிய காலத்திற்குள் ஆங்கிலம் பேசக் கற்றுக்கொடுக்கப்படும் வெளிநாடு செல்பவர்களுக்குசிறந்தது.தொடர்பு- K.சோமசுந்தரம், இல.6 மாவத்தை ஒழுங்கை, சுதுமலை தெற்கு, மானிப்பாய். Tel:- 021-4591001

(435)

## கௌரவம்

கோண்டாவில் நெட்டிலிப்பாய் பிள்ளையார் கோயிலில் கடந்த நாற்பத்தைந்து வருடங்களாகப் பூசகராகவும் பிரதம சிவாசாரியராகவும் மஹோற்சவ குருவாகவும் பெரும் பணியாற்றிவரும்சிவ ஸ்ரீ தா.சுப்பிரமணியக் குருக்களின் சேவைநலன் பாராட்டி மேற்படி கோயிற் பரிபாலன சபையினரால் அண்மையில் 'சிவாகம கிரியா வித்தகர்' என்னும் சிறப்புப் பட்டமளிக்கப்பட்டு பொன்னாடை போர்த்தி பொற்கிழி வழங்கிக் கௌரவம் அளிக்கப்பட்டது. (து)

# அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான வரையறை குறித்து தீவிர ஆய்வு

(கொழும்பு)

அரசாங்கத்தில் பதிவு செய்யப் படுகிற அரசசார்பற்ற நிறுவனங் களுக்கான வரையறை குறித்து தீவிரமாக ஆய்வுசெய்து வருவதாக நாடாளுமன்ற பொறுப்புக் குழு த் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள ஜே.வி.பியின் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பான நாடாளுமன்ற பொறுப்புக் குழுவின் தலைவராக ஜே.வி.பியின் நந்தன குணதிலக்க நியமிக்கப்பட்டிருந்தார் . அவர் கடந்த வாரம் அப் பொறுப்பிலிருந்து விலகியதையடுத்து விஜித ஹேரத் நியமிக்கப்பட்டார்.

அரசசார்பற்ற நிறுவனங்கள் பல சமூக சேவைகள் அமைச்சின் கீழும் வர்த்தக நிறுவனச் சட்டங்கள் கீழும் பதிவு செய்யப்பட்டுள்ள பழைய மாணவர் சங்கங்கள் கூட ஒரு அரச சார்பற்ற நிறுவனமாக அழைக்கப்படுகிறது இந்நிலையை மாற்றியமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று விஜித ஹேரத் தெரிவித்தார்.

கடந்த பிரேமதாச ஆட்சிக்காலத்தில் நீதிபதி ராஜவன சுந்தெர தலைமையில் அமைக்கப்பட்ட இதேபோன்ற நாடாளுமன்ற பொறுப்புக் குழுவின் பரிந்துரையையும் ஆராய்ந்து வருவதாகவும் எது அரச சார்பற்ற நிறுவனம் என்ற வரையறை விரைவில் உருவாக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். இக் குழுவில் மொத்தம் 29 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இடம் பெற்றுள்ளனர். (க)

# லெப். கேணல் வீரமணியின் வித்துடல் விதைக்கப்பட்டது



(கிளிநொச்சி)

லெப். கேணல் வீரமணியின் வித்துடல் கிளிநொச்சி மாவீரர் துயிலும் இல்லத்தில் முழு இராணுவ மரியாதையுடன் புனித விதை குழியில் நேற்று முன்தினம் விதைக்கப்பட்டுள்ளது. முன்னதாக கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் லெப் . கேணல் வீரமணியின் வித்துடலுக்கு விடுதலைப் புலிகளின் முக்கிய தளபதிகள், மக்கள் எனப் பல்லாயிரக்கணக்கானோர் வணக்கம் செலுத்தினர்

போராளி பசுபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பொதுச்சுடரினை மாவீரரின் தாயார் ஏற்றினார். மாவீரரின் துணைவியார் சுடரேற்றி வித்துடலுக்கு மலர்மாலை அணிவித்தார்.

விடுதலைப் புலிகளின்முக்கிய உறுப்பினர் க.வே. பாலகுமாரன், தளபதி கேணல் தீபன், தளபதி கேணல்பால்ராஜ்ஆகியோர்வீரவணக்க உரைகளை நிகழ்த்தினர்.

மாவீரரின் தாயார் மலர் வணக்கத்தினை தொடக்கி வைக்க தளபதிகள் பொறுப்பாளர்கள் போராளிகள் மக்கள் பெருமளவில் திரண்டு கண்ணீர் மல்க வீரவணக்கம் செலுத்தினர் . லெப். கேணல் வீரமணியின் வணக்க நிகழ்வுகள் கிளிநொச்சி பளையிலும் யாழ்.வடமராட்சி கிழக்கிலும் உணர்வு பூர்வமாக நடைபெற்றன.

பளை காவல் பணிமனையில் நேற்று முன்தினம் காலை 7.30 மணியளவில் போராளி விடுதலை தலைமையில் நிகழ்வு தொடங்கியது. சாள்ஸ் அன்ரனி படையணித் தளபதிகளில் ஒருவரான கோபித் பொதுச்சுடரினை ஏற்றினார். மாவீரரின் துணைவியார் சுடரேற்றி வித்துடலுக்கு மலர்மாலை அணிவித்தார். தமிழீழ நிதித்துறைப் பொறுப்பாளர் செ . தமிழேந்தி, தளபதி வீமன் , சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியினைச் சேர்ந்த பாவலன் ஆகியோர் வீரவணக்க உரைகளை நிகழ்த்தினர். வடபோர் முனைத் தளபதிகளில் ஒருவராகிய ஜெரி மலர் வணக்கத்தினை தொடங்கி வைத்தார். (க)

# பூசகரை காணவில்லையென ம.உ.ஆ. குழுவில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் மத்தியைச் சேர்ந்த வைத்தீஸ்வரசர்மா வெங்கட கிருஷ்ண சர்மா (வயது-50) என்பவரை கடந்த வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணியிலிருந்து காணவில்லை என அவர்களது உறவினர்களால் மனித உரிமைகள்ஆணைக் குழு மற்றும் போர் நிறுத்தக் கண் காணிப்புக்குழு ஆகியவற்றிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரனிடமும் முறைப்பாடுசெய்யப்பட்டுள்ளது.

இவர் கைதடி வீரபத்திரர் கோயிலுக்கு பூசைக்கு செல்வதாக கூறிச் சென்றார் என்றும் இதுவரை அவர் வீடு திரும்பவில்லை எனவும் கூறப்படுகின்றது.

இதேவேளை இவர் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் கோப்பாய் பாலமருகே வைத்து இராணுவத்தினரால் அச்சுறுத்தப்பட்டார் என்றும் கூறப்படுகிறது. (க-15)

## இராசிபலன்

29.05.2006

(வைகாசி 15திங்கட் கிழமை)

துதியை முற்பகல் 10.23 மணிவரை

மிருகசீரிடம் முற்பகல் 8.25மணிவரை

இராகுகாலம் 7.22-8.52மணிவரை

சுபநேரம் 11-52.1.22 மணிவரை

அமிர்தசித்தம்

| | |
|---|---|
| மேடம் | கூட்டுமுயற்சி , அந்நியர் சந்திப்பு , வாக்கு மேன்மை , போசன சுகம் |
| இடபம் | விவாதம், சகோதரர் உதவி, காரிய தாமதம், ரோகநிலை |
| மிதுனம் | சிந்தனை மிகுதி , பிறர்உதவ, காரிய அனுகூலம் , கல்வியில் ஆர்வம் |
| கடகம் | இடமாற்றம், வேலைச்சுமை, மனஸ் தாபம், முயற்சிதாமதம் |
| சிங்கம் | உறவினர் வருகை , முயற்சி கைகூடும, நல்ல வருமானம், புகழ். |
| கன்னி | பாராட்டு, பெரியோர் சந்திப்பு, காரிய அனுகூலம், சொத்துக்களால் நன்மை. |
| துலாம் | பிதாசிந்தை, புதியதிட்டமிடல், எதிர்பாராத செலவு , காரியதாமதம் |
| விருச்சிகம் | ஆரோக்கியக்குறைவு , உறவினர் மனஸ் தாபம், வேலைச்சுமை ,போசன சுகம். |
| தனுசு | சென்ற இடத்தில் செல்வாக்கு, தொழில நன்மை, ஆரோக்கியம், நல்லசெய்தி. |
| மகரம் | செய்தொழில் விருத்தி, சுபநிகழ்வு, தேகநலன், நல்லமுயற்சி. |
| கும்பம் | குடும்பக்கவலை, ஆரோக்கியக் குறைவு, வேலைச்சுமை, திடீர்நன்மை. |
| மீனம் | ஆழ்ந்த சிந்தை, தாய்வழி உறவு, தொழில்நன்மை, சுபசெலவு. |

- வளவன்

## ஊடுருவல் அணியுடன் மோதல் எல்லைப்படை போராளி வீரச்சாவு

மன்னார் மடுப் பகுதியில் விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பகுதிக்குள் ஊடுருவிய இராணுவத்தின் ஆழ ஊடுருவும் அணியினருக் கும் தமிழீழ எல்லைப்படையினருக்கும் இடையேயான மோதலில் ஒரு எல்லைப் படை வீரர் வீரச்சாவடைந்துள்ளார்.

மடு பரப்புகடந்தான் வீதியில் 15க்கும்மேற்பட்ட ஆழ ஊடுருவும் அணியினர் பதுங்கியிருந்து மரம் ஒன்றில் கிளைமோரைப் பொருத்திக் கொண்டிருந்தனர். அப்போது சுற்றுக்காவல் பணியில் ஈடுபட்டிருந்த எல்லைப் படையினர் ஊடுருவியோர் மீது தாக்குதல் நடத்தினர்.

இதையடுத்து இருதரப்பு துப்பாக்கிச் சண்டை நடந்தது. மடு தேவாலயப் பகுதியில் இம் மோதல் நடைபெற்றதாக மன்னார் அரசி யல்துறை பொறுப்பாளர் இனியவன் தெரிவித்துள்ளார். மேலும்ஆழஊடுருவும்அணியினரிடமிருந்து 2 பொதிகளில் உடனடி உணவுக்கான பொட்டலங்கள் 470 ரவைகள் 762 மி.மீ ஆகியவைகைப் பற்றப்பட்டதாகவும் இனியவன் கூறினார். (க)

## முன்னாள் ஜனாதிபதி இல்லத்தை ஒப்படைக்குமாறு வலியுறுத்தல்

முன்னாள் ஜனாதிபதி டி.பி. விஜயதுங்கவின் உத்தியோகப் பூர்வ இல்லத்தை அரசாங்கத்திடம் ஒப்படைக்க வேண்டும் என்று அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல கூறியுள்ளார். கடந்த 24 ஆம் திகதியன்று விஜயதுங்கவின் இல் லத்தினரை தொலைபேசியில் அழைத்த ஹெகலிய ரம்புக்வெல அரசாங்கத்திடம் அந்த இல்லத்தை ஒப்ப டைக்க வேண்டும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வேண்டு கோள் விடுத்துள்ளதாகத் தெரிவித்துள்ளார் . ஆனால் அவரது குடும்பத்தினர் இதைமறுத்துள்ளனர் .மஹிந்த ராஜபக்ஷ ஒப்படைக்கக் கோரினால் இல்லத்தை கையளித்துவிடுமாறு உடல் நலக் குறைவாக இருந்த விஜயதுங்க தெரிவிக்கவில்லை என்றும் சட்டப்படி முன்னாள் ஜனாதிபதிக்குரிய உத்தியோக பூர்வ இல்லம்இது என்றும் அவரது குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர் (க)

## புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு 350 குடும்பங்கள் இடப்பெயர்வு

திருகோணமலையில் படையினரின் ஆக்கிரமிப்பு பகுதியிலிருந்து 350 குடும்பங்கள் விடுதலைப்புலிகளின் நிர்வாகப்பகுதிக்கு இடம்பெயர்ந்துள்ளனர்.

மூதூரின் ஆதியம்மன்கேணி , லிங்கபுரம், சிவபுரம் ஆகிய பகுதிகளில் வசித்து வந்த இக் குடும்பங்கள் புலிகளின் நிர்வாகப் பகுதியான மூதூர் கிழக்குக்கு இடம் பெயர்ந்தன. படையினர் மற்றும் சிங்களக் குடியேற்றவாசிகளால் தங்களுக்கு அச்சுறுத்தல் விடுவிக்கப்பட்டதாலேயே விடுதலைப் புலிகளின் நிர்வாகப்பகுதிக்கு இடம் பெயர்ந்ததாக அம்மக்கள் தெரிவித்துள்ளனர். (க)

# இந்திய தூதுவரின் ஏற்பாட்டில் தேரர்களுக்கு விருந்துபசாரம்

(கொழும்பு)

இலங்கைக்கான இந்தியத்தூதுவர் ஸ்ரீமதி நிருபமாராவ் ''சம்புத ஜயந்தி'' பாரத தர்ம யாத்திரையை மேற்கொள்ளவுள்ள மஹாநாயக்க தேரர்களான வண.உடுகம ஸ்ரீபுத்தரக்பித மஹாநாயக்க தேரர், அஸ்கிரிய மஹநாயக்க வண.வேவல்தெனியே மேதா லங்கார தேரர், ராமன்ய மஹா நிகாயே ஞானிஸ்வர தேரர் போன்றோருக்கு தமது கொழும்பிலுள்ள உத்தியோக பூர்வ இல்லமான ''இந்திய மாளிகையில்'' காலை போசனத்தை ஏற்பாடு செய்துள்ளார். இவ்விருந்துபசாரம் ''சம்புத ஜயந்தி'' தமிழ் நாட்டிற்கு செல்லும் தினமான இன்று இடம் பெறவுள்ளது.

இலங்கையிலிருந்து எடுத்துச் செல்லப்படவுள்ள புத்தபெருமானின் திருவுருவச் சிலை தமிழ் நாட்டு புத்தவேடு விகாரையில் பிரதிர்ஷ்டை செய்யப்படவுள்ளது. இவ் விருந்துபசாரத்தில் ''சம்புத ஜயந்தி'' ஏற்பாட்டாளரான டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனவும் கலந்துகொள்ளவுள்ளார். (க)

பத்திரிகை விநியோகஸ்தர் தேவை

சொந்தமாக மோட்டார் சையிக்கிள் வைத்திருப்பவராகவும், சாரதி அனுமதிப்பத்திரம், பெற்றிருப்பதுடன் யாழ். நகரிலிருந்து 5 கி.மீ. தூரத்திற்குள் வசிப்பவராகவும் இருத்தல் வேண்டும். ஆர்வமுடையோர் 31.5.2006ஆம் திகதிக்கு முன்னராக கீழ் காணும் முகவரிக்கு தங்கள் விண்ணப்பத்தை அனுப்பிவைக்கலாம்

நிர்வாக உத்தியோகத்தர்,
வலம்புரி அன்கோ
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

# எரிபொருள் விலை மீண்டும் ஜூன் முதல் அதிகரிக்கும்?

(கொழும்பு)

ஜூன் மாதத்தில் எரிபொருட்களின் விலை மீண்டும் அதிகரிக்கப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுவதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

தற்போது உலக சந்தையில் பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் என்பவற்றின் விலை அதிகளவு உயர்ந்துள்ளதன் காரணமாக கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்டுள்ள நஷ்டத்தை கட்டுப்படுத்தும் பொருட்டு இவ்விலையதிகரிப்பு மேற்கொள்ளப்படவுள்ளதாக கூட்டுத்தாபன உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மே மாதமளவில் உலக சந்தையில் பெற்றோல் பீப்பாய் ஒன்றின் விலை 98 அமெரிக்கன் டொலர் வரையிலும் டீசல் பீப்பாய் ஒன்று 85 அமெரிக்க டொலர் ஆகவும் மண்ணெண்ணெய் பீப்பாய் ஒன்று 84 அமெரிக்க டொலராகவும் உயர்ந்திருந்தது.

இலங்கை மசகு எண்ணெய் பெற்றுக்கொள்ளும் நாடுகளில் மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை மே மாதமளவில் 66 அமெரிக்க டொலர்வரை அதிகரித்துள்ளது என்றும் அவ்வுயர் அதிகாரி தெரிவித்தார்.

உலக சந்தையில் மசகு எண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட எரிபொருட்களின் விலை உயர்வால் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்படுகின்ற நஷ்டத்தை தடுப்பதற்கென்றால் பெற்றோல் லீற்றர் ஒன்றினை 100 ரூபா வரையிலும் டீசல் லீற்றர் ஒன்றினை 70 ரூபா வரையிலும் மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றினை 67 ரூபாவரையிலும் உயர்த்த வேண்டியுள்ளது என கூட்டுத்தாபனம் அரசிற்கு சுட்டிகாட்டியுள்ளது.

உலக சந்தையில் மசகு எண்ணெய், பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் விலை உயர்வடைந்துள்ளதால் கூட்டுத்தாபனத்திற்கு மே மாதமளவில் 150 கோடி ரூபா வரை நஷ்ட மேற்பட்டுள்ளதாகவும் சிலர் மேலும் தெரிவித்துள்ளனர். (க)

## மூதூரில் தமிழ் இளைஞர் கடத்தல்

திருகோணமலை மூதூர் கிழக்கில் அடையாளம் தெரியாத நபர்களால் மாதவராஜா சதானந்தன் (வயது 26) என்ற இளைஞர் நேற்று முன்தினம் கடத்தப்பட்டுள்ளார்.

திருகோணமலை நகருக்கு தனது மனைவியுடன் படகு மூலம் செல்வதற்காக காத்திருந்தபோது இச்சம்பவம் நடந்துள்ளது.

மூதூர் கப்பல்துறையிலிருந்து வெள்ளை வானில் வந்தவர்களால் மாதவராஜா கடத்தப்பட்டதாக சம்பவத்தை நேரில் பார்த்த பலரும் தெரிவித்துள்ளனர்.

பொலிஸாரால் முதலில் சோதனைக்குள்ளாக்கப்பட்ட மாதவராஜா அதன் பின்னர் மூதூர் கப்பல்துறையில் நின்றிருந்த கடற்படையினரால் விசாரிக்கப்பட்டுள்ளார்.

கடற்படையினரது வளையத்தில் நின்றிருந்த நிலையிலேயே வெள்ளை வானில் வந்தவர்களால் அவர் கடத்தப்பட்டுள்ளார்.

தனது கணவர் கடத்தப்பட்டது குறித்து படைத்தரப்பினரிடம் மாதவராஜாவின் மனைவி கதறியழுது முறையிட்ட போதும் படைத்தரப்பினர் அம்முறைப்பாட்டை ஏற்க மறுத்துவிட்டனர். (க)

# புத்தகம் கட்டுநர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

பதிவாளர் திணைக்களத்தில் உள்ள புத்தகம் கட்டுநர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரி 18 வயதுக்கு மேற்பட்டவராகவும் 45 வயதுக்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும். அத்துடன் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாது சிங்களம் அல்லது தமிழ், ஆங்கில மொழி மற்றும் கணிதம் உள்ளிட்ட 6 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

அத்துடன் புத்தகம் கட்டுதல் சம்பந்தமான 3 வருட அனுபவம் கொண்டிருக்க வேண்டும்.

அல்லது வகுப்பு - 8 (ஆண்டு- 9) சித்தியுடன் புத்தகம் கட்டுதல் சம்பந்தமான 6 வருட அனுபவம் கொண்டிருக்கவேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவங்களை அனுப்புகின்ற கடித உறையின் மேல் மூலையில் பதிவாளர் நாயகம் திணைக்களத்தில் புத்தகம் கட்டுநர் பதவிகளுக்கு சேர்த்துக் கொள்ளல் என குறிப்பிட்டு எதிர்வரும் ஜூன் 26 ஆம் திகதிக்கு முன்னர் பதிவாளர் நாயகம் திணைக்களம் இல.280 பிரதான வீதி, கொழும்பு -11 எனும் விலாசத்துக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (க)

# பிறப்புச் சான்றிதழ்களை வழங்கும் நடமாடும் சேவை விரைவில் ஆரம்பம்

பிறப்புச் சான்றிதழ் இல்லாதவர்களுக்கு அவற்றை பெற்றுக்கொடுக்கும் வகையில் நடமாடும் சேவையொன்றை ஆரம்பிப்பதற்கு பதிவாளர் நாயகம் தீர்மானித்துள்ளார்.

நாட்டிலுள்ள சகல பிரஜைகளுக்கும் பிறப்புச் சான்றிதழ் வழங்கப்படுவதே இந்த வேலைத்திட்டத்தின் முக்கிய நோக்கமென்று பதிவாளர் நாயகம் எவ்.கே.இரத்தினசிறி தெரிவித்துள்ளார்.

தற்போது நாட்டில் நூற்றுக்கு 94 வீத மானவர்களிடையே பிறப்புச் சான்றிதழ் இருப்பதாக சுட்டிக்காட்டிய அவர், 2010 ஆம் ஆண்டிற்குள் சகலரும் பிறப்புச் சான்றிதழ்களை கொண்டிருக்கும் வகையில் இந்த வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படுமென்றும் தெரிவித்துள்ளார்.

6 மாவட்டங்களில் நடத்தப்பட்ட ஆய்வுகளின் மூலம் ஆயிரம் பேர் பிறப்புச் சான்றிதழ் இல்லாமல் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் பதிவாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார். (க-9)

## எழுத்தாற்றல் பயிற்சிப் பட்டறை

சர்வதேச புலம்பெயர் தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தினால் டியூஸ் பேர்க் நகரில் முன்னெடுக்கப்பட்ட புனைகதை, கவிதைகள், கட்டுரை எழுதுவதற்கான இரண்டாவது பயிற்சிப் பட்டறை கடந்த வியாழக்கிழமை மாலை 5.00 மணிக்கு அகவணக்கம், அறிமுகத்தோடு ஒன்றியப் பொறுப்பாளர் ஏலையா முருகதாசன் ஆரம்பித்து வைத்தார்.

ஆசிரியரும், பத்திரிகையாளரும் ஆய்வாளருமான சு.யோ.பற்றிமாகரன், படைப்பாற்றல், புனைகதை, மரபுசார்ந்த கவிதை, புதுக்கவிதை, கட்டுரை, பத்திரிகைச் செய்திகள், ஊடகத்துறை பற்றிய மையக் கருத்தினைக் கொண்டு விரிவானதொரு பயிற்சி வகுப்பினை நடாத்தினார்.

தொடர்ந்து ஆசிரியரும் கல்வியல் ஆய்வாளரும், ஊடகவியலாளருமான திருமதி றீற்றா பற்றிமாகரன் இளையோருக்கான எழுத்தார்வம், சுயஆர்வம் சிந்தனைத் தூண்டல்களினது வெற்றி பற்றியும் விரிந்துரை அளித்தார்.

திருமதி சந்திரா கோகிலனின் நெறிப்படுத்தலில் கலைமானி பாக்கியநாதன் நன்றியுரை நிகழ்த்தினார்.

கவிஞர்கள், சிறுகதை எழுத்தாளர்கள், கல்வியியலாளர்கள், பத்திரிகையாளர்கள், ஊடகவியலாளர்கள், வாசகர்கள், மாணவர்கள் நிறைவாக பயிற்சிப் பட்டறையில் கலந்துகொண்டார்கள். (க)

# புலிகளைப் பேச்சுமேசைக்கு கொண்டுவர தொடர்ந்தும் முயற்சி செய்கின்றதாம் அரசு!

## அமைச்சர் பிரியதர்ஷன யாப்பா கூறுகிறார்

தமிழீழ விடுதலைப் புலிகளைப் பேச்சு மேசைக்குக் கொண்டுவந்து நிலையான சமாதானத்தை உருவாக்குவதில் அரசு தொடர்ந்தும் தீவிரமாக முயற்சித்து வருகிறது. பேச்சில் கலந்துகொள்வது தொடர்பாகப் புலிகள் தங்களது பதிலை உடனடியாகத் தெரிவிக்க வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா ஊடகம் ஒன்றுக்கு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்,

புலிகள் பேச்சுக்கு வருவதற்கு முன் அவர்களின் மத்திய குழுக் கூட்டம் நடைபெறவேண்டும் என்றும், அதற்காக கிழக்குத் தளபதிகள் கிளிநொச்சிக்குச் செல்வதற்குஅரசு பிரயாண ஒழுங்கு செய்து தர வேண்டும் என்றும், அதன்பிறகுதான் பேச்சுக்கு வருவோம் என்றும் கூறினார்கள்.

பேச்சு இடம்பெறவேண்டுமென்பதற்காக நாம் கப்பல் மூலம் பிரயாண வசதிகளைச் செய்துகொடுக்க முன்வந்தோம். கடற்படை மீது சந்தேகம் கொண்டு அதைப் புலிகள் நிராகரித்துவிட்டனர்.

கப்பலுக்குப் பதிலாக ஹெலிகொப்டரை வழங்க முன்வந்தோம். அதிகப் பேரை ஏற்றவேண்டியிருப்பதாகவும் அரசு வழங்கும் ஹெலிகொப்டரில் இடவசதி இல்லையென்றும் கூறி அதனையும் நிராகரித்துவிட்டனர்.

பின்னர் சீ பிளேன் வழங்க முன்வந்தோம். சீ பிளேனை தரை இறக்குவதில் முரண்பட்டுக் கொண்டு புலிகள் நின்றனர். நாம் புலிகளுக்குப் பிரயாண வசதிகளைச் செய்துகொடுக்கத் தயாராகவிருக்கின்றோம். புலிகள் இன்னும் பதில் சொல்லவில்லை.

புலிகளைச் சர்வதேச நாடுகள் தடை செய்யத் தயாராகிவரும் இந்த நிலையில் நாம் புலிகளுடன் பேச முன்வந்திருப்பது முக்கியமான ஒரு விடயமாகும். புலிகள் பேச்சிலிருந்து நழுவிக்கொள்ளாமல் உடனடியாக அவர்களது பதிலைச் சொல்ல வேண்டும் என்றார். (க)

## சுனாமியின் போது காணாமல்போன
# சிறுவர்கள் குறித்து மீண்டும் ஆய்வு நடத்துவதற்கு திட்டம்

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தின்போது உயிர் தப்பி காணாமல் போனதாக கூறப்படும் சிறுவர்கள் தொடர்பாக மீண்டும் ஆய்வுகளை நடத்துவதற்கு நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

காணாமல்போன சிறுவர்களின் பெற்றோர்கள் செய்த முறைப்பாட்டை கவனத்தில் கொண்டு இந்த ஆய்வுகளை நடத்த தீர்மானித்ததாக நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு ஆணையாளர் சரத் அபயகுணவர்த்தன தெரிவித்துள்ளார்.

பிரதேச செயலாளர் பிரிவுகளில் இந்த ஆய்வுகள் நடத்தப்படவுள்ளன.

பிரதேச செயலக மேம்பாட்டு அதிகாரிகள் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம் ஆகியவற்றில் அமைக்கப்பட்டுள்ள சிறுவர் பாதுகாப்பு செயற்குழுக்களின் ஊடாக இந்த ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.

சுனாமி அனர்த்தத்தின்போது உயிர் தப்பிய பின்னர் பெற்றோரை விட்டு பிரிந்து சென்றுள்ள சிறுவர்கள் தொடர்பாக இது வரை 80 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு பிரிவு ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

சுனாமி அனர்த்தத்தின்போது குறிப்பிட்ட சிறுவர்கள் உயிர் தப்பியுள்ளதாகவும், அதன் பின்னர் முகாம்களில் தங்கியிருந்ததாகவும் முறைப்பாடுகளின் மூலம் தகவல்கள் கிடைத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சுனாமி அனர்த்தத்தின் போது பெற்றோர் இருவரையும் இழந்த சிறுவர்களை பதிவு செய்து நீதிமன்றத்தின்மூலம் பாதுகாவலர்களிடம் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகள் பூர்த்தியடைந்துள்ளமையால் பதிவு செய்யப்படாத சிறுவர்கள் இருக்கிறார்களா என்பது குறித்தும் இந்த ஆய்வின் போது கவனத்தில் கொள்ளப்படவுள்ளது. (க-9)

அண்மையில் நடைபெற்ற சாவகச்சேரி கிராம்புவில் பாலமுருகன் முன்பள்ளி இல்ல மெய்வல்லுனர் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு தென்மராட்சி கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் பாக்கியராஜா வெற்றிக் கேடயங்களை வழங்கிக் கௌரவித்த போது...

(படம்: சாவகச்சேரி நிருபர்)



## இன்று ஒரு தகவல்

# மூச்சுப் பயிற்சி

ஒருவர் வாழ்கிறார் என்று சொல்வதற்கும் ஏதோ இருக்கிறார் என்று சொல்வதற்கும் வித்தியாசம் இருக்கிறது. வாழ்கிறார் என்றால் தன்னுடைய உலகியல் கடமைகளையெல்லாம் ஒழுங்காகச் செய்கிறார் என்று அர்த்தம். ஏதோ இருக்கிறார் என்றால் மூச்சுவிட்டுக் கொண்டிருக்கிறார் என்று அர்த்தம் . ஆனாலும் மூச்சு விடுவதைப் பொறுத்துத்தான் வாழ்நாள் நிர்ணயிக் கப்படுகிறது.

குறைவாக மூச்சுவிடுபவர்கள் நீண்டநாட்களுக்கு இருக்கின்றனர். விரைவாக மூச்சுவிடுபவர்கள். விரைவாகப் போய்ச்சேர்ந்து விடுகின்றனர். மனிதன் ஒரு நிமிடத்திற்கு 12 தடவை மூச்சுவிடுகிறான். அவனு டைய சராசரி வாழ்நாள் 100 வருடம் குதிரை ஒரு நிமிடத் திற்கு 16தடவை மூச்சு விடுகிறதாம். 25வருடத்திற்கு மேல் அது இருப்பதில்லையாம். இதுவே இப்படி யென்றால் 34முறை மூச்சுவிடும் புறாவின் நிலை எப்படி இருக்கும் என்று பாருங்கள். ஆமை ஒரு நிமிடத்திற்கு 4 முறை மூச்சு விடுகிறது. அதன் வாழ்நாள் 500ஆண்டுகள்.தேரை ஒரு நிமிடத்திற்கு 2முறை மூச்சு விடுகிறது. அதன் வாழ்நாள் 2000 வருடம்.

நாம் மூச்சுப் பயிற்சி செய்தால் நீண்டகாலம் நன்றாக வாழமுடியும். சித்தர்கள் இந்த மூச்சுப் பயிற் சியைப் பற்றி நிறையச் சொல்லியிருக்கிறார்கள். தொடர்ந்து மூச்சுப் பயிற்சி செய்துகொண்டு வந்தால் இரத்த அழுத்த நோய் வராதாம்.ஆஸ்துமா வராது. ஞாபகசக்தி பெருகும். முகத்தில் களையும் ஒளியும் உண்டாகும். இரத்தம் சுத்தமாகும். நரை, திரை உண்டா காது. மூளையும் நுரையீரலும் வலுவடையும். கள் குடிபபத்னால் உண்டாகக் கூடிய களிப்பை இந்த மூச்சுப பயிற்சியே தரும் என்கிறார் திருமூலர்.

சரி இந்த மூச்சுப் பயிற்சியை நாம் எப்படி செய் யலாம்? மேல் நோக்கி அதாவது மல்லாந்து படுத்துக் கொண்டு மூச்சை மூக்கால் இழுத்து... கொஞ்சநேரம் அடக்கி வைத்திருப்பது பின் மூச்சுவிடவேண்டும்.

இப்படி படுத்துக்கொண்டு மூச்சுப் பை நிறையும் படியாக மூச்சுவிட்டுப் பழகிய பின் நின்றுகொண்டோ நடந்து கொண்டோ பழகலாம். கொஞ்சநாளில்... நாம் எங்கிருந்தாலும் பிரயாணம் பண்ணிக் கொண்டிருந் தாலும்... நம்மை அறியாமல் நீண்டமூச்சு இழுத்து விடக்கூடிய பழக்கம் ஏற்பட்டுவிடும்.

இது மிகவும் சுலபமான ஒருபயிற்சி. பழக்கத் திற்குக் கொண்டு வந்துவிட்டால் மிகவும் நல்லது. காலையில் எழுந்தவுடன் வாயைக் கொப்பளித்து விட்டு வெறும் வயிற்றில் மூன்று குவளை நிறையக் கொதித்தாறிய நீர் குடிக்கவேண்டும். பின்பு 20 நிமிடத்திற்குக் குறையாமல் மூச்சுப் பயிற்சி செய் யலாம் என்று அனுபவசாலிகள் கூறுகின்றனர். காலை யில் சந்தர்ப்பம் கிடைக்காவிட்டால் சிற்றுண்டி சாப்பிட்டு இரண்டு மணி நேரம் கழித்து அல்லது சாப்பாடு சாப்பிட்டு மூன்று மணிநேரம் கழித்து மூச்சுப் பயிற்சி செய்யலாமாம்.

இதுவரையும் சொன்னது சாதாரண மூச்சுப் பயிற்சி இது தவிர பிரணாயாமம் போன்ற சில சிறப்பான பயிற்சிகளும் உண்டு. அதையும் கற்றுக்கொண்டு செய்யலாம். மனம் வைத்து இதையெல்லாம் நாம் செய்ய ஆரம்பித்தால் மருந்துச் செலவு இருக்காது. ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டிய அவசியமெல் லாம் வராது.

ஒரு ஆள் "அவசரமாக ஆஸ்பத்திரிக்குப் போக வேணடும். அதற்கு என்ன வழி?" என்றான். "வேக மாக நடந்துபோ... இந்தத் தெருவின் முடிவில் தான் ஆஸ்பத்திரி" என்றார்கள். "அதைவிட விரைவாகப் போக வேண்டும்"என்றான். "அப்படியென்றால் சைக் கிளில் போகலாம்" என்றார்கள். "அதை விடவேக மாகப் போக வேண்டும என்றான். "அப்படியென்றால் காரில் போகலாம்" என்றார்கள். "அதைவிட வேகமாகப் போகவேண்டும்" என்றான்.

"அப்படியென்றால்...ஏதோ எதிரில் நிற்கும் வெறி நாயைக் கல்லால் அடி... துரத்த ஆரம்பிக்கும்...நீ விரைவில் போய்ச் சேர்ந்து விடலாம்" என்றார்கள்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## தீவக மக்கள் இடம்பெயர்வு

(யாழ்ப்பாணம்)


கடற்படையினரின் முழுமையான கட்டுப்பாட்டிலிருப்பதாகக் கூறப்படும் தீவகத்திலிருந்து மக்கள் தொடர்ந்தும் இடம்பெயர்ந்த வண்ணமேயிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

முன்னதாக அல்லைப்பிட்டிப் பகுதியில் இடம்பெற்ற படுகொலைகளையடுத்து அப்பகுதி மக்கள் முற்றாக இடம் பெயர்ந்துள்ளனர். தற்போது இரு வயோததிபகுடும்பங்களே அங்கு எஞ்சியுள்ளன. அவர்களும் அங்கிருந்து தற்போது வெளியேற முடிவு செய்துள்ளனர் எனக் கூறப்படுகிறது.

இதனிடையே தீவகப் பகுதி மக்களுக்கான முழுமையான பாதுகாப்பை வழங்க கடற்படை தயாராக இருப்பதாக வடபிராந்திய கடற்படைத் தளபதி அறிவித்துள்ளதுடன் தீவக மக்களை இடம்பெயர வேண்டாமென்றும் அண்மையில் ஊர்காவற்றுறையில் இடம்பெற்ற சந்திப்பில் கேட்டிருந்தார். எனினும் கடந்த வெள்ளிக்கிழமை ஊர்காவற்றுறை புளியங்கூடல் பிள்ளையார் கோவிலில் இடம்பெற்ற துப்பாக்கி ச்சூட்டில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்த சம்பவத்தையடுத்து வேலணை, சுருவில் மற்றும் ஊர்காவற்றுறை நெடுந்தீவுப் பகுதியிலிருந்து நாள் தோறும் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் இடம்பெயர்ந்த வண்ணமுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (கு)

# புனர்வாழ்வுக் கழகத்தினருடன் ஹன்சன் பௌயர் சந்திப்பு





இலங்கைக்கான நோர்வேயின் சிறப்புத் தூதுவர் ஹன்சன் பௌ யர் நேற்று முன்தினம் தமிழர்புனர்வாழ்வுக் கழக பிரதிநிதிகளை சந்தித்து உரையாடினார். கிளிநொச்சியில் உள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழக நடுவப் பணியகத்தில் நேற்று முன் தினம் காலை 10 மணியளவில் இச் சந்திப்பு நடைபெற்றது.

தற்போதைய இராணுவ நடவடிக்கைகளால் இடம் பெயர்ந்து வாழும் மக்களின் நிலைமைகள் தொடர்பாக இச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது.

வடக்கு- கிழக்கில் தற்போதைய இராணுவ அச்சுறுத்தல்காரணமாக இடம்பெயர்ந்து வன்னி பெரு நிலப்பரப்பிற்குள் வந்துள்ள மக்களின் தற்போதைய வாழ்வியல் சூழ்நிலைகள் தொடர்பாகவும் அவர்கள் எதிர்நோக்கி வருகின்ற பிரச்சினைகள் தொடர்பாகவும் இடம்பெயர்ந்த மக்களின் மீள்வாழ்வுக்கான பணிகளை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் எவ்வாறு முன்னெடுத்து வருகிறது என்பது தொடர்பாகவும் தொடர்ந்தும் இடம்பெயாந்து வரும் மக்களைப் பராமரிப்பதில் ஏற்பட்டுள்ள போக்குவரத்துப் பாதைகள் இடைக்கிடை தடைப்படுவது குறித்தும் அத்தியாவசியப் பொருட்களை குறிப்பாக கட்டடப்பொருட்களை எடுத்து வருவதில் ஏற்பட்டுள்ள இடையூறுகள் தொடர்பாகவும் தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பிரதிநிதிகள் எடுத்து விளக்கியிருந்தனர்.

ஆழிப்பேரலைக்குப் பின்னரான மீள் கட்டுமானப் பணிகள் தாமதமடைவது தொடர்பாகவும் அவற்றைத் தொடர்ந்தும்முன்னெடுப்பதிலுள்ள தற்போதைய நாட்டின் சூழ் நிலைகள்பற்றியும்ஹன்சன் பௌயருடன்கலந்துரையாடப்பட்டது. தமிழர்புனர்வாழ்வுக் கழகத்தின் உதவி நிறைவேற்றுப் பணிப் பாளர் ரவிச்சந்திரன், திட்டமிடல் பணிப்பாளர் லோறன்ஸ் கிறிஸ்ரி, தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் வெளிநாட்டுக்கிளைகளின் செயற் திட்ட ஒருங்கிணைப்புப் பணிப்பாளர் பரமேஸ்வரன், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் தலைவர் சிவனடியார், உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனப்பணிப் பாளர் பா. திலகா, வவுனியா மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் திருஞானசம்பந்தமூர்த்தி மற்றும் கிளிநொச்சி மாவட்ட போர் நிறுத்த கண்காணிப்புக்குழு உறுப்பினர் ஆகியோர் இச்சந்திப்பில் உடனிருந்தனர். (கு)

## வர்த்தகர்களை மிரட்டியமைக்கு விடுதலைப்புலிகள் கண்டனம்

களுவாஞ்சிக்குடி வர்த்தகர்களை மூன்று நாட்களுக்கு வர்த்தக நிலையங்களை திறக்காது மூடுமாறு அதிரடிப் படையினர் கொலை மிரட்டல் விடுத்திருப்பதை தமிழீழ விடுதலைப் புலிகள் வன்மையாகக் கண்டித்துள்ளனர். இதுபோர் நிறுத்த மீறல் எனத் தெரிவித் துள்ளதோடு யுத்த பீதியை ஏற்படுத்தும் செயல் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதுகுறித்து மட்டக்களப்பு மாவட்ட அரசியல்துறை, போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு முறையிட்டிருக்கின்றது.அந்த முறைப்பாட்டுக் கடிதத்தில் 2006.05.25 ஆம் திகதி காலையில் விசேட அதிரடிப்படையினர் ஆரையம்பதி தொடக்கம் களுவாஞ்சிக்குடி வரையுள்ள பகுதிகளில் உள்ள அனைத்துக் கடைகளையும் மூன்று நாட்களுக்கு மூடும் படி வர்த்தகர்களை அச்சுறுத்தி மூடியுள்ளனர்.

இக் கட்டளையை மீறி எவராவது கடைகளைத் திறந்தால் அவர்களைக் கொலை செய்வதாகவும் மிரட்டியுள்ளனர். இத்திடீர் நடவடிக்கை இப் பகுதியிலுள்ள பொது மக்களின் நாளாந்த இயல்பு வாழ்க்கையைச் சீர்குலைப்பதுடன் இம் மாவட்டத்திலுள்ள மக்கள் மத்தியில் ஒரு யுத்த பீதியை ஏற்படுத்துவதுமே இவர்களது நோக்கமாகும்.

விசேட அதிரடிப்படையினர் எமது பிரதேசத்தில் மக்களின் அன்றாட வாழ்வியலைப் பாதிக்கும் சமாதான ஒப்பந்தத்தைச் சீர்குலைக்கும் நட்வடிக்கையில் ஈடுபடுகின்றனர் என்பதை மிகக் கவலையுடனும் தெரிவித்துக் கொள்வதோடு இதை தமிழீழ விடுதலைப் புலிகள் மிக வன்மையாகக் கண்டிப்பதுடன் இது ஒரு பூரண யுத்த நிறுத்த மீறலாகும் என்பதையும் தெரிவித்துக் கொள்ளு கின்றனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (கு)

## குடும்ப விபரங்களை திரட்டும் படையினர்

மண்டைதீவுப் பகுதியில் படையினர் வீடு வீடாகச் சென்று குடும்ப விபரங்களை சேகரித்து வருகின்றனர் என்றும் பொதுமக்கள் தங்களது புகைப்படங்களை தம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என படையினர் கோரிக்கை விடுத்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை தீவகப் பகுதிகளில் படையினர் இறுக்கமான பாதுகாப்பு கெடுபிடிகளையும் அமுல்படுத்தி வருகின்றனர் என்றும் குறிப்பாக தீவகப் பகுதியில் பொது மக்கள் 24 மணிநேரமும் நடமாடலாம் என படையினர் கூறி வருகின்றபோதும் மாலைவேளைகளில் வீதிகளில் நடமாடுவோரை தாக்குவதுடன் கடும் தொல்லைகளையும் கொடுத்து வருகின்றனர் என்வும் கூறப்படுகின் றது. (கு)

## கொழும்பு மேயராக ஆட்டோ சாரதி தெரிவு

(கொழும்பு)

கொழும்பு மாநகரசபை மேயராக மொகமெட் இம்தியாஸ் (வயது -22)என்ற ஆட்டோ சாரதி தெரிவாகியுள்ளார். கொழும்பு மாநகரசபை தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவுடன் சுயேட்சைக் குழு-03 வெற்றிபெற்றது. இக் குழுவினர் சார்பில் மேயராக உவைஸ் மொகமெட் இம்தியாஸ் மற்றும் பிரதிமேயராக கனகமெ சந்திரசேன (வயது-65)ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இருவரது தெரிவு தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் எதிர்வரும் வாரம் வெளியிடப்படவுள்ளது. வர்த்தமானி அறிவித்தலுக்குப் பின்னர் இருவரும் பதவியேற்கவுள்ளனர். சுயேட்சை குழு-03 அணியினது தலைவர் அன்னாபிள்ளை இராஜேந்திரனின் உறவினர் மொகமெட் இம்தியாஸ் என்பது குறிப்பிடத்தக்கது. (கு)

## மட்டு.முதலைக்குடா கிராம மக்களுக்கு தற்காப்புப் பயிற்சி





(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு முதலைக்குடா கிராம மக்களுக்கான தற்காப்புப் பயிற்சி நேற்று முன்தினம் பிற்பகல் 5.00 மணியளவில் ஊரக மேம்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் தலைவர் வே. கணேசமூர்த்தி தலைமையில் ஆரம்பமானது.


பயிற்சி ஆசிரியர் அரிச்சந்திரனால் மக்களுக்கான தற்காப்புப் பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்டன. இதில் 200 இற்கு மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டமை குறிப் பிடத் தக்கது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கிராமியப் படை பலத்தினை வலுப்படுத்தும் நோக்கில் கிராமங்கள் தோறும் நடாத்தப்பட்டுக் கொண்டு வரும் தற்காப்புப் பயிற்சியின் வரிசையில் நேற்று முன்தினம் மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் மண்டபத்தடி, கன்னன்குடா, கரையாக்கன் தீவு ஆகிய கிராம மக்களுக்கும் தற்காப்புப் பயிற்சிகள் நடைபெற்றன. (கு)

# நெல்சன் மண்டேலா

த. பாண்டியன்

## மீள்பார்வை 54



### தப்பி ஓட முயற்சி

அரசியல்தலைவர்களை விடுவிக்கவும் விரும்புகிறது. இதற்கு, தடையாக, இடையூறாக நிற்பது தென்னாபிரிக்கக் காங்கிரஸ் தான்.

அக்கட்சி, கம்யூனிஸ்டுக் கட்சியால் வழி நடத்தப்படுகிறது. கம்யூனிஸ்டுகள் அக்கட்சியில் முக்கிய பொறுப்புக்களிலும் உள்ளனர். எனவே, கம்யூனிஸ்டுக் கட்சிக்கும், எங்களுக்கும் சம்பந்தம் இல்லை என தென்னாபிரிக்க காங்கிரஸ், பகிரங்கமாகப் பிரகடனம் செய்ய வேண்டும். கம்யூனிஸ்டுகளை காங்கிரஸிலிருந்து வெளியேற்ற வேண்டும்.

இரண்டாவதாக ஆயுதமேந்திய போராட்டத்தைக் கைவிடுவதாக அறிவித்து ஆயுதங்களையும் ஒப்படைக்கவேண்டும். இந்த இரண்டையும் செய்தால் தலைவர்களை விடுவிக்கவும் சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அரசு தயாராக இருப்பதாக அறிவித்தார்.

ஆபிரிக்க அரசின் தலைவர் செய்துவரும் பிரச்சாரம், மறுக்கப்படாவிட்டால், காங்கிரஸ் தான் குற்றவாளி என்பதுபோல ஆகிவிடும். ஆகவே, போத்தாவுக்கே ஒரு கடிதம் எழுதுவது என மண்டேலா முடிவு செய்தார். ஜோஸ்லோவுடன் கலந்துபேசி கடிதம் எழுதத் தொடங்கினார். எழுதிக் கொண்டிருக்கும் போது ஒரு வார்டர் வந்து, “என்ன எழுதுகிறீர்கள்? யார் அனுமதி தந்தது?” என மிரட்டினார். மண்டேலா, “சிறையதிகாரியை அழைத்து வா. கடிதம் அவர் மூலம் தான் போகவேண்டும்” என்றார். சிறையதிகாரி வந்தவுடன், அரசுத் தலைவருக்குக் கடிதம் என்பதை மண்டேலா சொன்னவுடன், “அதற்கு அனுமதியுண்டா?” என அவர் கேட்டார். “நேற்று அவர் பேசியதைக் கேட்கவில்லையா. இது எனக்காக எழுதப்படும் கடிதம் அல்ல. நாட்டுக்காக எழுதப்படும் கடிதம். அனுப்பிவையுங்கள்” என்றார். கடிதம் போனது.

சட்ட மந்திரி மண்டேலாவைச் சந்திக்க வந்தார். ஏனெனில் கடிதம் அரசைப் பதில் கூற வேண்டிய இடத்தில் நிறுத்திவிட்டது. மண்டேலாவின் கடிதத்தின் சாரம் என்னவென்றால்,

“பிரச்சினைகளைத் தீர்க்க விரும்புவதாக நீங்கள் பேசியிருப்பதை வரவேற்கிறேன். அந்தப் பிரச்சினைகள் தீர இருதரப்பும் பேசி ஒற்றுமை காண வேண்டும் என்பதை ஒப்புவீர்கள் என நம்புகிறேன். இரு நிபந்தனைகளை விதித்துள்ளீர்கள். நாங்கள் சிறையில் இருப்பதற்கே உங்கள் அரசு கடைப்பிடிக்கும் நிறவெறிக் கொள்கைதான் காரணம். அதை எதிர்த்துத்தான் ஆயுதம் ஏந்தத் தள்ளப்பட்டோம். சிறைப்பட்டோம். எனவே எங்களை விடுவித்தாலும், அந்தச் சட்டங்களை எதிர்த்து, மறு வினாடியே போராடி மீண்டும் சிறைக்கு வரவேண்டித்தான் இருக்கும். எனவே, என்னை விடுதலை செய்வது பற்றி யோசிக்கவேண்டாம். பிரச்சினைகளைத் தீர்க்க இருதரப்பும் சந்திப்பதும் பேசுவதும் தேவை. எனவே நிபந்தனை போடாது “பேசுவது பற்றிப் பேசலாம்” என எழுதியிருந்தார்.

அரசு பதில் கூறவேண்டியதாகிவிட்டது. ஆனால் இந்தக் கடிதம் பற்றி நிர்வாகக் குழுவில் பேசி ஒப்புதல் பெறவில்லை. எனவே, விமர்சனம் ஏற்கனவே தொடங்கிவிட்ட சந்தேகம், ஆகியவற்றால் கலங்கவே செய்தார். ஜோஸ்லோவுடன் கலந்தாலோசித்த பிறகு, ஒரு தலைவன் சில சமயங்களில் துரிதமாக, சுயேச்சையாக முடிவெடுத்து வழிகாட்ட வேண்டியது அவசியம். அது தவறாகப் போய், கெட்ட விளைவுகள் ஏற்பட்டால், பழியை ஏற்கவும் பயப்படக்கூடாது எனமுடிவு செய்து கொண்டார். மனச்சாட்சிப்படி முடிவு எடுக்கிறேன். நடப்பது நடக்கட்டும் என முடிவு செய்து கொண்டார்.

பொதுக் கைதிகள் பலர் மண்டேலாவுடன் பேசுவதையும் தவிர்ப்பது தெரிந்தது. இளைஞர்கள் கோபமாகப் பார்ப்பதும் தெரிந்தது. இது ஒரு சங்கடமான அருவருப்பான பிரச்சினைதான். இருந்தாலும் சகித்துக் கொண்டார். “ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும். ஆபிரிக்க தேசியக் காங்கிரஸிலிருந்து கம்யூனிஸ்டுகளை வெளியேற்ற வேண்டும் என்ற நிபந்தனைகளை ஏற்றாலன்றிப் பேச்சுவார்த்தை சாத்தியமில்லை” என்றார் போத்தா. “பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண ஒப்பந்தம் வந்தாலன்றி, ஆயுதத்தைக் கீழே போட இயலாது. நிபந்தனையின்றிப் பேச்சுவார்த்தை” என்பது தான் மண்டேலாவின் நிலை.

பேச்சு அங்குலம் கூட நகரவில்லை. நகராததால், அவதூறு வலுப்பெற்று வந்தது. வெள்ளையன் மண்டேலாவை மொட்டையடித்து, மீசை தாடியைப் பிடுங்கிவிட்டதாகப் பேசிச் சிரிப்பது பரவலாகிவிட்டது. போத்தா தொடர்ந்து, தான் சுமுகத் தீர்வு காணத் தயாராக இருப்பதாகவும், ஆனால், தென் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ், கம்யூனிஸ்டுகளின் ஆதிக்கத்தில் சிக்குண்டு இருப்பதால், ஆட்சியைப் புரட்சி மூலம் கைப்பற்ற, ஆயுதமேந்திப் போராடிக் கொண்டிருப்பதால் தான் பிரச்சினை தீராமல், நீடிக்கிறது என்றே பிரச்சாரம் செய்து வந்தார். இதற்கு மறுப்புத் தரவேண்டியது அவசியம் என்பதை மண்டேலா உணர்ந்தார்.

இதே காலத்தில் சிறைக்குள்ளிருந்த கைதிகளிடையே மோதல் வலுத்து வந்தது. உள்ளேயும் பிளவு ஏற்பட்டுவிட்டது. இளைஞர்கள் சிலரை மண்டேலா சந்தித்தபோது, தாங்கள் சாகும் வரை போராடத் தயாராக இருப்பதாகவும், எனவே, பேச்சுவார்த்தை வேண்டாமென்றனர். வெள்ளைக்காரர்கள், மோசடி வேலையில் இறங்கியுள்ளனர் என்றும், மக்கள்போராடத் தயாராகி விட்டதைக் கண்டும், தோல்வி நிச்சயம் என்பதை உணர்ந்திருப்பதாலும், அமைதிப் பேச்சுவார்த்தை என்ற போர்வையில் தங்களைத் தற்காத்துக் கொள்ளவே ஏஜெண்டுகளைத் தேடுகிறார்களென்றும் ஆவேசமாகப் பேசினார்கள்.

தன் கட்சியினருக்கும், இயக்க ஆதரவாளர்களுக்கும் புரியவைப்பதே முதற் கடமையாக எழுந்து விட்டதை மண்டேலா உணர்ந்தார். போராடுவதைவிட, அமைதி வழியில் தீர்வு காண்பது தான் ஒரு தலைவனுக்கு சோதனையான காரியம் என்பதை மண்டேலா ஒவ்வொரு நொடியும் உணரத் தலைப்பட்டார். ஆட்சி அதிகாரத்திலிருப்பவர்கள், திட்டமிட்டே பேச்சுவார்த்தையை இழுத்தடித்தனர். சங்கிலிகளால் கட்டுண்டு கிடக்கிற ஒருவனுக்கு, பயிற்சி பெற்ற முரட்டுத்தனமான, விதிகளை மதிக்காத குத்துச் சண்டை வீரனோடு, குத்துச் சண்டை நடத்துவது மாதிரி இது இருந்தது. 1987முதல் 1989 முடிய நடந்தது. அறிவு, பொறுமை ஆகியவற்றைச் சோதித்த காலம் இது.

போத்தாவின் அரசில் சட்டத்துறை மந்திரியாக இருந்த கோயச்சீ என்பவர் மண்டேலாவைச் சந்தித்துப் பேச பலமுறை வந்தார். ஒவ்வொரு தடவையும், உடல்நலம் பற்றி விசாரித்து விட்டு, சுமுக முடிவுவர ஏங்குவதாகக் கூறிவிட்டு, இதற்கு மேல் பேச தனக்கு அதிகாரமில்லை எனக் கூறி விட்டுப் போய் விடுவது வழக்கம்.

பின்னர் மூவர் கொண்ட ஒரு குழுவை நியமித்து, மண்டேலாவுடன் ரகசியமாகச் சிறையில் பேச ஏற்பாடு செய்தனர். தன் சகாக்களையும் இந்தப் பேச்சுவார்த்தையில் பங்கெடுக்க அனுமதிக்குமாறு கேட்டதற்குத கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவரான ஜோஸ்லேவோ நீங்கலாக, மற்றவர்களுடன் பேசத் தயார் என்றனர். மண்டேலா இதை ஒப்புக்கொள்ளவில்லை. தமது அணியில் பிளவை ஏற்படுத்த எதிர்தரப்பு முயற்சிப்பதை மண்டேலா புரிந்து கொண்டு, அதை நிராகரித்துவிட்டார். (தொடரும்)





வலி தெற்கு பிரதேச செயலக கலாசாரப் பேரவை நடத்திய கலை இலக்கியப் பெருவிழா இரண்டாம் நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.மாவட்ட செயலரும் அரசாங்க அதிபருமாகிய கே.கணேஷ் பரதநாட்டியத்தில் முதலிடம் பெற்ற பு.சசிகாந்தனுக்கு பரிசில் வழங்குவதையும், யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிகத் துறைப் பீடாதிபதி க.தேவராசா சிறுகதைப் போட்டியில் பரிசில் பெற்ற செ.பரமநாதனுக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# விண்ணப்பம் கோரல்

தேசிய கல்வியியற் கல்லூரி ஒன்றில் ஆசிரியர் கல்வியில் மூன்றாண்டுகால சேவை முன் தொழிற் பயிற்சி ஒன்றைப் பயிலுவதற்கு தேவையான கல்வித் தகைமைகளையும், தகுதிகளையுமுடைய விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரி 2007.01.01 இல் 25 வயதுக்கு மேற்படாதவராக இருக்க வேண்டும்.

இதேவேளை கத்தோலிக்க அல்லது கிறிஸ்தவ நெறிகளுக்கு விண்ணப்பிக்கும் மத குருமாருக்கான வயதுஎல்லை 01.01. 2007 இல் 30வயதுக்கு மேற் படாதவராக இருக்க வேண்டும்.

அத்துடன் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் ஒரே அமர்வில் 3 பாடங்களில்சித்திபெற்றிருக்கவேண்டும்.

க.பொ.த.சாதாரணதரப் பரீட்சையில் கணிதம், தமிழ்மொழி உள்ளிட்ட 6 பாடங்களில் இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களை ஜூன் மாதம் 26ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத்தபாலில் “பரீட்சை ஆணையாளர் நாயகம், பாடசாலை பரீட்சை ஒழுங்கமைப்பு பகுதி தேசிய மதிப்பீட்டுக்கும், பரீட்சித்தலுக்கான சேவைகள், பரீட்சைத் திணைக்களம், த.பெ.இல. 1503, கொழும்பு” என்ற விலாசத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விபரங்களை மே மாதம் 26ஆம் திகதி வெளிவந்த வர்த்தமானியில் பார்வையிடலாம். (க)

# பாலியல் வன்முறைகள் குறித்த முறைப்பாடுகளை விசாரிக்க குழு?

(கொழும்பு)

அலுவலகங்களில் இடம்பெறுகின்ற பாலியல் வன்முறைகள் பற்றியமுறைப்பாடுகளை விசாரணை செய்ய உடனடியாக செயற் குழுக்களை நியமிக்குமாறு சகல அமைச்சுக்களினதும் செயலாளர் களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பை சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் மேம்பாட்டு அமைச்சு விடுத்துள்ளது.

இது தொடர்பாக 7 பேர் கொண்ட குழுக்களை நியமிக்குமாறு சகல அமைச்சர்களின் செயலாளர்களுக்கும் திணைக்களத் தலைவர்களுக்கும் சுற்றுநிருபம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாக சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் மேம் பாட்டு அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இந்தக் குழுக்களில் பெண்களுக்கு சமபங்கு அளிக்கப்பட வேண்டுமெனவும் தொழில் சங்க அனுபவமுள்ள அதிகாரி ஒருவர் இடம்பெற வேண்டுமெனவும் அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு சுற்றுநிருப மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் ஆலோசனையின் பேரில் அமைச்சர் சுமேதாஜி ஜெயசேன முன்வைத்த அமைச்சரவை பத்திரத்திற்கு அமையவே இந்தத் திர்மானம் எடுக்கப்பட்டிருந்தது.

புதிதாக அமைக்கப்படும் குழுக்கள் சிறுவர் அபிவி ருத்தி மற்றும் மகளிர் மேம்பாட் டு அமைச்சு டன் இணைக்கப்படுமென்றும் தெரிவிக்கப்படுகின்றது. (கு-9)

# தொழில் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் ஐ. ஓ. எம். நிறுவன அனுசரணையுடன் வெளிநாட்டிலிருந்து வந்து மீளக்குடியமர்ந்தவர்களுக்கான ஐந்துநாள் தொழிற் பயிற்சி வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இப் பயிற்சி எதிர்வரும் 30, 31, 01,02,05 ஆம் திகதிகளில் நடத்தப்படவுள்ளதாகவும் இப் பயிற்சியின் போது வர்த்தக அறிமுகம், பேக்கறி உற்பத்தி என்பன தொடர்பாக கருத்துரை வழங்கப்பட்டு பயிற்சி நெறி முடிவின் போது இவர்களுக்கான தொழில் முயற்சிக்கான உபகரணங்கள் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (கு-133)

## இந்தோனேஷியாவில் பூகம்பம்;

# பலியானவர்களின் தொகை 4500 ஆக உயர்வு

# கட்டடங்களுக்கு அடியில் பிணக்குவியல்கள்




(ஜகார்த்தா)

சுனாமிக்கு பிறகு இந்தோனேஷியாவில் அடிக்கடி நிலநடுக்கம் ஏற்பட்டு வந்தது. இதில் மிகப்பெரிய அளவில் பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை. ஆனால் நேற்று முன்தினம் காலை அங்குள்ள யோசியா கார்த்தா பகுதியில் ஏற்பட்ட புதிய நிலநடுக்கம் பெரும் சேதத்தை ஏற்படுத்தி இருக்கிறது.

யோசியா கார்த்தா, பான்துல் ஆகிய நகரங்களும் அதைச் சுற்றியுள்ள ஏராளமான கிராமங்களும் மிகப் பலத்த சேதத்தை சந்தித்துள்ளன.

**பான்துல் நகரில்...**

இதில் பான்துல் நகரம் அடியோடு பாதித்து விட்டது. இங்குள்ள 80 சதவீத வீடுகள் கட்டடங்கள் இடிந்து விட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இங்கு மட்டுமே 2ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் பலியாகியிருக்கிறார்கள்.

**யோசியா கார்த்தாவில்...**

யோசியா கார்த்தா இந்தோனேஷியாவின் தலைநகரம் ஜகார்த்தாவுக்கு அடுத்து பெரிய நகரமாகும். இங்கும் ஆயிரக்கணக்கான கட்டடங்கள் இடிந்து விழுந்துள்ளன. இது பழங்கால நகரம். எனவே ஏராளமான பழங்கால கட்டடங்களும் இடிந்தன.

இவற்றில் 7ஆம் நூற்றாண்டு புரோபுகார் புத்த ஆலயம், பராம்பரன் இந்துக் கோவில் ஆகியவை உள்ளன. முக்கிய சுற்றுலா தலமான இந்த கோவில்களின் ஒரு பகுதியும் இடிந்துள்ளன. இந்து கோவில் மிகப் பலத்த சேதத்தை சந்தித்து இருப்பதாக அரசு கூறியுள்ளது. இவற்றில் இடிபாடுகளுக்குள் சிக்கி பலர் பலியானார்கள். நூற்றுக்கணக்கானோர் படுகாயமடைந்தனர்.

யோசியா கார்த்தா நகரில் இறந்தவர்களின் எண்ணிக்கை ஆயிரத்தை தாண்டி இருக்கிறது. இந்த நகரம் 30 கிலோ மீற்றர் சுற்றளவு கொண்டது.

**நகரை சுற்றியிருக்கும் கிராமங்களில்...**

இந்த நகருக்கு அருகே உள்ள 3 கிராமங்கள் முற்றிலும் அழிந்துவிட்டன. பூகம்பத்தில் இறந்தவர்கள் எண்ணிக்கை 4 ஆயிரத்து 500ஆகவுள்ளது. இந்த தொகை மேலும் அதிகரிக்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இன்னும் முழுமையான முறையில் மீட்புபணி நடக்கவில்லை. இடிந்த கட்டடங்கள் பல அப்படியே கிடக்கின்றன. அவற்றுக்கு அடியில் ஏராளமான பிணங்கள் கிடக்கின்றன. எனவே சாவு எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

10 ஆயிரத்தில் இருந்து 20 ஆயிரம் பேர் வரை காயமடைந்து இருப்பதாக அந்த நாட்டு துணை அதிபர் யூசுப் கல்லா கூறினார்.

**மருத்துவ வசதியின்றி அவதி**

அவர்கள் 21 ஆஸ்பத்திரிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். ஆனால் பல ஆஸ்பத்திரிகளில் கட்டடங்கள் பூகம்பத்தால் சேதமடைந்துள்ளன. எனவே காயம் அடைந்தவர்களுக்கு திறந்த வெளியில் வைத்து சிகிச்சை அளிக்கப்படுகிறது. பலர் மரத்தடியில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

சிகிச்சை அளிப்பதற்கு தேவையான மருந்துகள், பெண்டேஜ் துணிகள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. காயமடைந்தவர்கள் படுப்பதற்கு போர்வைத் துணிகள் இல்லாமல் பிளாஸ்டிக் தாள்களில் படுக்கவைக்கப்பட்டுள்ளனர்.

2 இலட்சம் பேர் வீடுகளை இழந்து தெருவில் தவிக்கிறார்கள். அவர்களுக்கு இன்னும் நிவாரண உதவிகள் சென்றடையவில்லை.

**எங்கு பார்த்தாலும் ஒரே அழுகுரல் சத்தம்**

மீட்கப்பட்ட பிணங்கள் உடனடியாக ஆங்காங்கே குழிதோண்டி மொத்தமாக புதைக்கப்படுகின்றன. எங்கு பார்த்தாலும் ஒரே அழுகுரலாகவே இருக்கிறது.

பலியாகியிருப்பவர்கள் பிணத்தை வாங்கக்கூட ஆள் வரவில்லை. அந்தப் பிணங்களை உடனுக்குடன் புதைத்து வருகின்றனர். தொற்றுநோய் ஏற்படக்கூடாது என்பதால் பிணங்களை உடனே புதைக்கும்படி உத்தரவிட்டு உள்ளனர்.

**உலகநாடுகள் உதவி**

இந்தோனேஷியாவின் அருகே உள்ள நாடான மலேசியாவில் இருந்து 56 பேர் கொண்ட மீட்பு குழு அனுப்பப்பட்டுள்ளது. அவர்கள் மீட்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். ரஷியா உட்பட பல நாடுகளும் மீட்பு குழுவை அனுப்புவதாக அறிவித்துள்ளன. ஆனால் இன்னும் அவர்கள் பூகம்ப பகுதிக்குச் சென்றடையவில்லை.

இந்தோனேஷியா அரசிடம் மீட்பு பணிக்கு தேவையான உபகரணங்கள் இல்லாததால் மீட்பு பணியில் தொய்வு ஏற்பட்டுள்ளது. இப்போது இடிபாடுகளுக்குள் சிக்கி உயிருடன் இருப்பவர்களை மீட்பதற்கே முக்கியத்துவம் கொடுத்து வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

அமெரிக்கா உடனடியாக 5இலட்சம் டொலர் நிவாரண உதவி அளிப்பதாக அறிவித்துள்ளது. யுனிசெப் நிறுவனம் 9 ஆயிரம் தார்ப்பாய், 2 ஆயிரம் கூடாரம் ஆகியவற்றை அனுப்பி வைத்துள்ளது. இத்தாலி நாடு 27 டன் எடை கொண்ட கூடாரம் மற்றும் நிவாரண உதவிப் பொருட்களை அனுப்பிவைத்துள்ளது.

ஐரோப்பிய யுனிபல் நாடுகள் டாக்டர்கள் மற்றும் மருந்துப் பொருட்களை அனுப்புவதாக அறிவித்துள்ளன. 38 இலட்சம் மில்லியன் டொலர் பண உதவியும் அளித்துள்ளன.

ஆனால் நிவாரண பொருட்களை யோசியா கார்த்தா நகருக்கு கொண்டு செல்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இங்குள்ள விமான நிலைய ஓடுதளம் நிலநடுக்கத்தால் விரிசல் அடைந்துள்ளது. இதனால் விமான நிலையம் மூடப்பட்டது. நிபுணர்குழு இந்த இடங்களை ஆய்வு செய்யவுள்ளது. அதன் பிறகு விமானங்களை தரை இறங்க அனுமதிக்கப்படும். எனவே நிவாரண பொருட்கள் வர தாமதம் ஆகியது.




பூகம்பம் ஏற்பட்ட பகுதியில் மீண்டும் நிலநடுக்கம் ஏற்படலாம் என்ற பீதி மக்களிடையே நிலவுகிறது. எனவே பெரும்பாலான மக்கள் வீட்டை விட்டு வெளியேறி திறந்தவெளியில் தங்கியிருக்கின்றார்கள். (கு)

World News உலக தரிசனம்

# காஸ் குழாய்கள் வெடிவைத்து தகர்ப்பு

# பாக்.கில் தீவிரவாதிகள் வெறிச்செயல்

பாகிஸ்தானில் இயற்கை எரிவாயு குழாய்களை தீவிரவாதிகள் வெடிவைத்து தகர்த்தனர். இதில் எந்த உயிர்ச்தேசமும் இல்லை.

பாகிஸ்தானில் உள்ளது பலுசிஸ்தான் மாகாணம். ஈரான் மற்றும் ஆப்கானிஸ்தான் நாடுகளின் எல்லையை ஒட்டியிருக்கும் இப்பகுதியில் சுயி என்ற இடம் உள்ளது. இங்குதான் பாகிஸ்தானின் மிகப்பெரிய இயற்கை எரிவாயு (காஸ்) கிணறு உள்ளது. இது பாகிஸ்தான் பெற்றோலிய நிறுவனத்திற்குச் சொந்தமானது. இங்கிருந்து காஸ் சப்ளை செய்யப்படும் இரண்டு முக்கிய குழாய்களை கடந்த வெள்ளிக்கிழமை இரவு தீவிரவாதிகள் வெடிவைத்து தகர்த்தனர். இதையடுத்து தீ பயங்கரமாக பரவியதில் 50 கடைகள் தீக்கிரையாகின. ஆனால் இச்சம்பவத்தில் யாருக்கும் உயிர்ச்சேதம் ஏற்படவில்லை.

வேகமாக பரவிய தீ உடனே அணைக்கப்பட்டது என்றும் சேதத்தை மதிப்பிட இன்ஜீனியர்கள் சம்பவ இடத்திற்கு சென்றுள்ளனர் என்றும் உள்ளூர் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தையடுத்து பஞ்சாப் மாகாணத்தில் உள்ள மின் உற்பத்தி நிலையங்களுக்கான விநியோகத்தில் பாதிப்பு ஏற்பட்டது. தற்போது விநியோகம் சீரமைக்கப்பட்டு விட்டது என்று பாகிஸ்தான் பெற்றோலிய நிறுவனத்தின் அதிகாரியான கே.டபிள்யூ. ஷரீக் தெரிவித்தார்.

பலுசிஸ்தானிலுள்ள தீவிரவாதிகள் தங்களுக்கு கூடுதல் அதிகாரம் மற்றும் மாகாணத்தில் உள்ள இயற்கை வளங்கள் மீது அதிக கட்டுப்பாடு வேண்டும் என்று கேட்டு போராடி வருகின்றனர். இதனை வலியுறுத்தி அவர்கள் இயற்கை எரிவாயு கிணறுகள், ரயில் பாதைகள் மற்றும் மின் கம்பங்களை குறிவைத்து அவ்வப்போது தாக்குதல் நடத்தி வருகின்றனர். கடந்த ஆண்டு இங்கு தீவிரவாதிகள் ரொக்கெட் வீசி தாக்குதல் நடத்தினர். அதில் 15 பேர் பலியாயினர் என்பது குறிப்பிடத்தக்கது. (கு)

# அணுசக்தி ஒப்பந்தத்தில் இந்தியாவுக்கு புதிய நிபந்தனை விதிக்க மாட்டோம்

## புஷ் நிர்வாகம் அறிவிப்பு

(வாஷிங்டன்)

அணுசக்தியை ஆக்கபூர்வ பணிகளுக்கு பயன்படுத்துவது தொடர்பாக இந்தியா – அமெரிக்கா இடையே ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது. எனினும் இதில் இடம்பெற்றுள்ள சில நிபந்தனைகளுக்கு அமெரிக்க எம்.பிக்கள் சிலர் எதிர்ப்புத் தெரிவித்து புதிய நிபந்தனைகளை சேர்க்க வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றனர். இதனால் அணுசக்தி ஒப்பந்தத்துக்கு அந்நாட்டு பாராளுமன்றத்தின் ஒப்புதலை பெறுவதில் சிக்கல் காணப்படுகிறது.

இந்நிலையில் மத்திய மற்றும் தெற்காசிய நாடுகளின் விவகாரங்களுக்கான அமெரிக்க இணை மந்திரி ரிச்சர்ட் பவுச்சர் ஒரு செய்தி நிறுவனத்திற்கு கடந்த வெள்ளிக்கிழமை பேட்டி அளித்தார். அதில்,

இந்தியாவுடனான அணுசக்தி ஒப்பந்தம் பற்றி அமெரிக்க எம்.பிக்களுடன் தொடர்ந்து தீவிரமாக விவாதித்து வருகிறோம். இந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதில் எந்தப் பிரச்சினையும் இல்லை.

ஒப்பந்தத்தில் இடம்பெற்றிருக்கும் சில ஷரத்துக்கள் குறித்து பலவிதமான கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன. இது விஷயத்தில் அமெரிக்க எம்.பிக்கள் கூறும் கருத்துக்களை நாங்கள் கண்டிப்பாக ஏற்றுக் கொள்வோம். எனினும் தற்போதைய நிலையில் ஒப்பந்தத்தில் புதிய நிபந்தனைகள் அல்லது சட்டங்களை சேர்க்க முடியாது.

அமெரிக்க வெளியுறவு இணை மந்திரி நிக்கோலஸ்பேர்ன்சும், இந்திய வெளியுறவு செயலாளர் ஷியாம் சரணும் லண்டனில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியிருப்பது மற்றொரு நல்ல நடவடிக்கை ஆகும். இந்தச் சந்திப்பின் போது அணுசக்தி ஒப்பந்தம் பற்றிய எங்களது முன் வரைவுக்கு பதில் அளிக்கும் வகையில் இந்தியா கருத்து தெரிவித்துள்ளது. ஒப்பந்தத்தில் இடம் பெற்றிருக்கும் பாதுகாப்பு அம்சங்கள் சிவில் மற்றும் இராணுவ பயன்பாடுகளுக்கு பிரிக்கும் திட்டம் பற்றிய சில கேள்விகளுக்கு இந்தியா பதிலளித்தால் உதவியாக இருக்கும் என அவர் கூறியுள்ளார். (து)

# தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டின் கீழ்...

பாகிஸ்தானின் வாசீரிஸ்தான் பகுதிகள் தற்போது தலிபான் தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டில் வந்துவிட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பாகிஸ்தானில் ஆப்கானிஸ்தான் நாட்டையொட்டியுள்ளது பழங்குடியினர் வசிக்கும் பகுதி. இங்கு வடக்கு வாசீரிஸ்தான்த தெற்கு வாசீரிஸ்தான் என இரு பகுதிகள் உள்ளன. முழுவதும் மலைப்பாங்கான பகுதியில் பழங்குடியின மக்கள் அதிகம் வசித்து வருகின்றனர்.

இங்குள்ள பல நகரங்களில் தன்னாட்சி நிர்வாகமே நடந்து வருகிறது. தெற்கு வாசீரிஸ்தான் பகுதியில் 2003ஆம் ஆண்டு முதல் 2005ஆம் ஆண்டு தொடக்கம் வரை அல்-குவைதா தீவிரவாதிகளை தேடும் பணியில் பாகிஸ்தான் இராணுவத்தினர் ஈடுபட்டு வந்தனர். தற்போது இராணுவ வீரர்களின் தேடுதல் வேட்டை வடக்கு வாசீரிஸ்தான் பகுதியில் நடந்துவருகிறது. கடந்த 2005ஆம் ஆண்டு முதல் இதுவரை 300 தீவிரவாதிகள் இங்கு கொல்லப்பட்டுள்ளனர்.

தெற்கு வாசீரிஸ்தானில் உள்ள ஒவ்வொரு பகுதியையும் தீவிரவாதிகள் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வந்துள்ளனர். இங்குள்ள வானா என்ற நகரத்தை அவர்கள் கைப்பற்றியுள்ளனர். அங்கு அலுவலகங்களை திறந்து ஆட்சி நடத்தி வருகின்றனர். செக் போஸ்டர்களை அமைத்து வாகனங்களை தணிக்கை செய்கின்றனர். வானா நகருக்குள் வரும் வாகனங்களிடம் வரி வசூலிக்கின்றனர்.

இதையடுத்து வானா நகரில் வசிப்பவர்களில் பலர் அருகில் உள்ள டாங்க் என்ற நகருக்கு சென்று விட்டனர். இந்நகரம் பாகிஸ்தானின் வடமேற்கு எல்லை மாகாணத்தில் உள்ளது.

தற்போது தெற்கு வாசீரிஸ்தான் பகுதியில் அமைதி நிலவுகிறது என்று பாகிஸ்தான் அரசு கூறி வருகிறது. ஆனால் இதை அப்பகுதி மக்கள் மறுக்கின்றனர். அவர்கள் கூறுகையில், அங்கு அமைதி நிலவுகிறது என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் அப்பகுதி அரசு நிர்வாகத்தின் கீழ் இருக்கிறது என்பதை நாங்கள் ஏற்றுக் கொள்ளமாட்டோம் என்று தெரிவித்துள்ளனர். (து)

நான்கு பேர் அமர்ந்து சீட்டாடுகிறோம். அவரவர்களுக்கு விழுகிற சீட்டு இருக்கிறதே அது விதி. விழுந்த சீட்டை எப்படி ஆடுகிறோம் என்பது தான் மதி.

-டாக்டர் இராதாகிருஷ்ணன்

வலம்புரி

## ஐ.நா.படை வரும் சாத்தியம் உண்டா?

இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் சமாச்சாரம் வெளிநாடுகளின் அனுசரணையுடனும் நிறைவேறவில்லை.

கடந்த நான்கு வருடங்களாக சமாதான அனுசரணைப்பணியில் ஈடுபட்ட நோர்வே ஓர் திடமான முடிவை எடுத்திருக்கும்.

அதாவது, இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியாதென்பதே அதுவாகும். கடந்த நான்கு ஆண்டுகளாக இலங்கையின் சமாதானப் பணியில் ஈடுபட்ட நோர்வே அரசு தனது பணிக்கு 'அனுசரணை' என்ற பதத்தையே சூட்டியிருந்தது.

'மத்தியஸ்தம்' என்ற பெயர் சூட்டுவதை அந் நாடு விரும்பவில்லை. அரசு-விடுதலைப்புலிகள் ஆகிய இரண்டு தரப்பையும் தொடர்பு படுத்தி பேச்சுக்களை முன்னெடுப்பது. அதனூடாக நிரந்தர சமாதானத்தை அடைவது. இதுவே நோர்வேயின் இலக்கு.

எனினும் அதை எட்ட முடியாமல் போய்விட்டதையும். இனிமேல் அந்த முயற்சியால் எந்தப் பயனும் கிடைக்கப்போவதில்லை என்பதையும் நோர்வேத் தூதுவர்கள் தற்போது தெளிவாக உணர்ந்துள்ளார்கள்.

கடந்த நான்கு வருடங்களாக சமாதான அனுசரணைப்பணியில் ஈடுபட்டிருந்த நோர்வே இலங்கை இனப்பிரச்சினையை இரு தரப்புப்பேச்சுக்கள் மூலம் தீர்க்க முடியாதென்னும் உண்மை உலக நாடுகளுக்கு எடுத்துக்கூறாமல் விடப்போவதும் இல்லை.

சுருங்கக்கூறின் சமாதான அனுசரணைப் பணியில் ஈடுபட்ட நோர்வே, சர்வதேச சமூகத்தின் ஓர் பிரதிநிதியாகவே தனது பணியை மேற் கொண்டிருந்தது.

ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய போன்ற அரசியல் கட்சிகள் நினைப்பது போல நோர்வே தனித்த ஒரு நாடாக இலங்கைப்பிரச்சினையில் தலையிடவில்லை.

மாறாக ஐக்கிய நாடுகள் சபை உள்ளிட்ட சர்வதேச அமைப்புகள் மற்றும் உலக நாடுகளின் சார்பாகவே அந்த நாடு இலங்கை பிரச்சினையில் தனது பணியை ஆற்றியிருந்தது. இப்போது பணியை முடிபுக்குக் கொண்டு வரும் காலம் நெருங்கி விட்டது.

இவ்வாறு சமாதான சூழ்நிலை குழம்பி யுத்தம் மீளவும் ஆரம்பமாகும் என்ற நிலையில் நோர்வே தனது பணியின் விரிவாக்கம் பற்றி உலக அரங்கில் எடுத்துரைக்கப்போவது உறுதி.

அவ்வாறான எடுத்துரைப்பில் ஐக்கிய நாடுகள் சபை தனது படையணியை இலங்கைக்கு அனுப்ப வேண்டுமா? இல்லையா ? என்ற முடிபையும் அந்த நாடு விதந்துரைக்கும்.

இதற்கு மேலாக இலங்கைக்கு 12 தடவை வருகை தந்திருந்த யப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாசியும் இலங்கை நிலைவரம் குறித்து உலகிற்கு எடுத்துரைப்பார் என்பதை உணர முடியும்.

எதுவாயினும் ஐ.நா.படைகள் இலங்கைக்கு வருமா ? இல்லையா ? என்பதைத்தீர்மானிக்கும் பொறுப்பு நோர்வேயிடமும் யப்பானிடமுமே உண்டு.

இதனை நிறைவேற்றுவதற்கு மேலடைநாடான இந்தியாவின் அனுமதி பெறப்படும் என்பதை மட்டும் இவ் விடத்தில் உறுதிபடக்கூறலாம்.

# உலகெங்கும் இன்று ஒலிக்கப் போகும் புலம்பெயர் தமிழர்களின் உரிமைக்குரல்

இலங்கை அரச படையினர் தமிழ் மக்கள் மீது கட்ட விழ்த்து விட்டுள்ள படுகொலைகள் சர்வதேசத்தின் பக்கசார்பான நிலைப்பாடு என்பவற்றைக் கண்டித்து புலம்பெயர் நாடுகளில்தமிழ் மக்களால் இன்று நடத் தப்படவுள்ளது. உரிமைக்குரல் நிகழ்வு கனடாவின் ரொறன்ரோ மற்றும் ஒட்டாவா நகரங்களில் நடை பெறவுள்ள தாக அறிவிக்கப்பட் டுள்ளது.

தமிழீழ மக்களின் ஏக பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளை கனடா அரசாங்கம் தடை செய்ததன் காரணத்தால் உந்தப்பெற்ற இனவெறியால் இலங்கைஅரசு மேற்கொள்ளும் திட்டமிட்ட தமிழினப்படுகொலையையும் மனித உரிமை மீறல்களையும் உடன் நிறுத்துவதற்கு கனேடிய அரசும் சர்வதேச சமூகமும் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரியும் ஈழத்தமிழரின் அடிப்படை அபிலாசைகளான தன்னாட்சி யுரிமை ,தாயகம், தேசியம் என்பன ஏற்றுக் கொள்ளப்பட்டு தமிழீழ விடுதலைப்புலிகளே தமிழ்மக்களின் தேசியத்தலைமை என்ற யதார்த்தம் மதிக்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்தியும்;

கனேடியஅரசானது எவ்விதத்திலும் பொருத்தமற்ற சூழ்நிலையில் பக்கச்சார்புடன் தமிழர் பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப்புலிகளை தடை செய்தமை தவறு என்பதை சுட்டிக்காட்டவும் அதனைமீளாய்வு செய்யக்கோரியும் ,

யுத்த நிறுத்த உடன்பாடு ஏற்படுவதற்கு ஆதார சக்தியாக விளங்கிய ஐரோப்பிய ஒன்றியத்தி ன் தடைசெய்யும் முயற்சியான தற்போதைய பக்கச்சார்பு நிலைப்பாட்டை [illegible]கவிடுமாறு வலியுறுத்தியும்இவ் உரிமைக்குரல் நிகழ்[illegible] இடம்பெறவுள்ளது . புலம்பெயர் தமிழரோடு கனேடியதமிழர் சமூகமும் அல்லலுறும் தம்மக்களின் துயர்தீர்க்கவும் அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் தமது உணர்வுகளை சர்வதேச உலகிற்கு எடுத்துக்காட்டவும் தாம் அனைவரும் பெருந்திரளாக சர்வதேசத்தின் மனச்சாட்சியைத்தட்டி யெழுப்பவும் ஒன்றிணைந்து உரிமைக்குரலை எழுப்பவுள்ளனர்

இது தொடர்பாக நிகழ்வின் ஏற்பாட்டுக்குழு விடுத்துள்ள அறிக்கையில், இலங்கை அரசினது தமிழ் அழிப்பு மனப்பான்மை இன்று சர்வதேசத்திற்கும் சந்தேகமின்றித் தெரிகிறது. தமிழ் விருட்சத்தின் கிளைகளும் விழுதுகளும் இலையும் குருத்துக்களும் வெட்டவெளிச்சத்தில் பேரினவாதக் கோடரியால் வெட்டப்படுகின்றன. நிலைமையின் கொடூரமுணர்த்தும் எண்ணற் ஆவணங்கள் உடனிற்குடன் உலகெங்கும் சமர்ப்பிக்கப்படுகின்றன . இருந்தும்வெட்டு வோரைத் தடுப்பதை விட்டு உலகு நம் வேரிற்குக் குறிவைக்கிறது. கோடரி ஓங்கம் கைகளைக்கீறி விடுமோ என்பது போல் சர்வதேசம் தானுமிறங்கி நம் கொப்புக்களை வெட்டுகின்றது. ஜனநாயகச் சத்தமிடும் மனித உரிமைப் பேரிகைகள் தமிழீழனத்தின் ஜனநாயக பிரதிநிதிகளைத் தடைசெய்து தொடர்கிறது.

தமிழினம் அமைதியானது அகிம்சைக்குப் பெயர்பெற்றது. ஆனால் தன்னை கொல்லவரும் பசுவையும் கொல்லலாம் எனத் திடமாக நம்புவது. பொறுமை எங்கள் பெறுமதி. நாகரிகத்தின் தோற்றுநர்களில் நாங்களும் முதல்வர்கள். அநீதியின் அசிங்கப் பிடிகளைத் இனங்காணும் ஆற்றல் எங்களிற்குண்டு. பேசச்சொன்னார்கள் இவர்கள் சொல்லுமுன்பிருந்தே நாங்கள் பேசுகின்றோம். இவர்கள் சொன்னபின்னும் பேசுகின்றோம் . நாங்கள் நியாயமானவர்கள் . ஆங்கில காலனித்துவத்தின் அந்திமகாலத்தில் ஒன்றாயிருந்த பல தேசங்கள் பிரிந்து எழுந்தன. ஆனால் நாங்கள் இரண்டாய் இருந்தவர்கள் ஒன்றாய் வாழ ஆசைப்பட்டோம். மனிதத்தை மதிப்பவர்கள், தவிருந்தோம்பி மகிழ்பவர்கள், நட்பின்வாஞ்சையோடு சேர்ந்து வாழக் கரங்கொடுத்தோம். என்ன செய்வோம் நட்பின் சமிக்ஞையினை அவர்கள் காட்டவில்லை. வீரத்தின் பாரம்பரியம் எங்களுடையது. மறவரை வணங்கும் வழக்கம் தொன்று தொட்டு எங்களுடன் இருக்கிறது .

கார்த்திகை 11 இல் கனேடிய தேசத்தின் தியாகமறவரை மனமார நினைத்து நெஞ்சிலே பொப்பிப் பூவை பெருமையுடன் அணியும் தமிழர்அதேமாதம் 27 இல் கார்த்திகை பூவை பிடித்திருத்தல் தவறென இன்று கனேடிய மண்ணில் சட்டம். அமெரிக்க அரசு கேட்டுக்கொண்டதற்கிணங்க கனடாவில் தமிழரிற்குத்தடை விதிக்கப்பட்டதாகச் சொல்கிறார் நம் சட்டத்தரணி.

எமதாருயிர்த் தேசம் , அடைக்கலம்தந்த பூமி கனேடிய தேசத்தின் இறைமையின் இன்றைய நிலை கண்டு நாம் கதிகலங்கி நிற்கையிலே செய்தி வந்தது . அமெரிக்க அரசு கேட்டுக் கொண் டதற்கிணங்க ஐரோப்பிய ஒன்றியம்தமிழரிற்கு தடைவிதிக்கச் சம்மதம் என்று, உலகை நாம்புதிதாகப் பார்க்கின்றோம் மேற்குல எல்லைகள் எங்கேஎனத் தேடுகின்றோம். மேற்கின் அரியல் முறைமை என்னவெனக் குழப்புகின்றோம். இலங்கைத்தீவின் இறைமைபற்றிப் பேசுபவர்கள் சமஷ்டி என்றும் ஏதேவென்றும்தம் நாட்டின்நடைமுறையை எமை அழைத் துக் காட்டியவர்கள் உண்மையிலே இவர்கள் முறைமை என்ன வென்று புரியாது விழிக்கின்றோம்

உலகெங்கும்தமிழனின் உரிமைக்குரல் இணையட்டும். எல்லைகள் வரம்புகள் மீறிக் குரல் உயரட்டும். கண்டமெலாம் வாழ்ந்தாலும் எங்கள் உயிர் தமிழீழம். எங்களவர் வீழ்கையில் எங்களிற்கா உறக்கம் வரும்? திட்டமிட்டு நாங்கள் பட்டியலிடப்படுகின்றோம். ஈனப்படுத்தப்படுகின்றோம். உயிர்வதை செய்யும்பேரினவாதம்பற்றி நாம் பேசமுடியாதபடி எங்களின் உரிமைகளைத் துரத்திப்பிடுங்கிறார்கள். இனிமேல் ஓட இடமில்லை என நாம் அங்கலாய்க்கும் வகையில் நம்மைத் துரத்துகிறார்கள். பயங்கரவாதத்தால் பலியெடுக்கப்படும் எம்மைப் பயங்கரவாதிகள் என இதயமின்றி இகழ்கிறார்கள்.

எங்களின் உறவுகளிற்காய் இன்னுமொரு முறை முயல்வோம். மேற்கின இதயங்களில் ஈரம் வேண்டி ஒலிப்போம். ஒன்று திரண்டு இந்த பூமிப்பந்தின் ஒவ்வொரு அங்குலத் திலும் உரிமை கேட்டு எழுவோம். எங்களின் சொந்தங்களுக்குநாங்களேனும் உள்ளோம் என்று உரத்தக் குரல் கொடுக்கத்திரள்வோம் என்றுள்ளது. (க)

# இந்திய பெற்றோலிய நிறுவனத்துடனான மோதலை முடிவுக்கு கொண்டுவர முயற்சி

(கொழும்பு)

இலங்கையில் உள்ள இந்தியபெற்றோலிய நிறுவனத்துக்கும் இலங்கைஅரசாங்கத்துக்கும் இடையேயான மோதலை முடிவுக்கு கொண்டுவர ஒரு சமர திட்டம் முன் வைக்கப் பட்டுள்ளது.

கடந்த 2004 ஆம்ஆண்டு ஜனவரி முதல் 2006 ஏப்ரல் வரை இந்திய பெற்றோலியநிறுவனத்துக்கு 76 மில்லியன் அமெரிக்க டொலர் மானியமாக இலங்கை அரசாங்கம் செலுத்த வேண்டியுள்ளது

இந்திய பெற்றோலிய நிறுவனம் இதைக் கோரி யபோது பெற்றோலிய நிறுவனத்தின்லாப நட்டகணக்குகளை தாக்கல் செய்ய வேண்டு ம்எனக்கூறி இலங்கை அரசாங்கம் தொகையை செலுத்த மறுத்து விட்டது.

இதையடுத்து நிலுவையில் உள்ள மானியத்தொகை செலுத்தப்படாத வரை எண்ணெய் இறக்குமதி ஏதும் மேற்கொள்ளப்பட மாட்டாது என்று இந்திய நிறுவனம் அறிவித்தது.

பெற்றோல் கையிருப்பானது 20 நாட்களுக்கும் டீசல் கையிருப்பானது 45 நாட்களுக்கு மட்டுமே இருப்பதாகவும் அந் நிறுவ்னம் அறிவித்தது.

இலங்கையில் மொத்தம் 160 எரிபொருள் நிலையங்களை இந்திய நிறுவனம் நடத்தி வருகிறது.

இப்பிரச்சனை தொடர்பாககருத்து தெரிவித்த இந்திய நிறுவன இயக்குநர் கே . இராமகிருஷ்ணன் கடந்த வெள்ளிக்கிழமையன்று இலங்கையின் திறை சேரி செயலாளர் பி. பீ. ஜயசுந்தரவை சந்தித்து இது குறித்து பேசியதாகவும் சமரசத்திட்டம் ஒன்றை அவர் கையளித்துள்ளதாகவும் கூறினார்.

அதில் குறிப்பிட்டுள்ள தொகையால் எமது நிறுவனத்துக்கு இழப்பே ஏற்படும் என்றும் நாம் வர்த்தக ரீதியாக இயங்குவதற்கான தொகை செலுத்தப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார். (க)

## வன்முறைகளை தொடரவிட்டால் இருதரப்பு மோதல்கள் அதிகரிக்கும்

### இலங்கை வணிகர் கழகம் அச்சம்

வன்முறைகளை கட்டுப்பாட்டுக்கள் கொண்டுவராது அதை தொடரவிட்டால் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான மோதல்கள் மேலும் அதிகரிக்கும் என இலங்கை வணிகர் கழகம் அச்சம் வெளியிட்டுள்ளது.

நாட்டின் பாதுகாப்பு நிலைவரம் குறித்து கழகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில் அரசாங்கப்படைகள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் திருகோணமலையில் 5 சிங்களவர்கள்கொல்லப்பட்டமை 1983 ஆம் ஆண்டுக்கு பின்னர் பெருமளவான தமிழர்கள் கொல்லப்பட் ட மை அவர்களின் சொத்துக்கள் அழிக்கப்பட்டமை போன்ற சம்பவங்களை வணிகர் கழகம் பட்டியலிட்டுள்ளது.

இந்த நிலையில் அரசாங்கம் இந்த வன்முறை சூழ்நிலையை கட்டுப்படுத்த உரிய முனைப்புகளை மேற்கொள்ள வேண்டும என கழகம் கோரிக்கை விடுத்துள்ளது.

திருகோணமலை, வவுனியா மற்றும் வடமத்திய பிரதேசங்களில் உள்ள மக்களுக்கு உரிய பாதுகாப்புக்களை உறுதிப் படுத்தவேண்டும் நாட்டை பாதுகாக்கும் தோரணையில் செயற்படும்தேவையற்ற குழுக்களின்செயற்பாடுகளைகட்டுப்படுத்த வேண்டும் .

அகதிகளுக்கு உரிய தேவைகளைபூர்த்தி செய்ய வேண்டும். மற்றும் வன்முறைகளில் ஈடுபடுவோரையும் குற்றச் செயல்களில் ஈடுபடுவோரையும் கைது செய்து தண்டிக்க வேண்டும் போன்ற கோரிக்கைகளை வணிகர்கழகம் முன்வைத்துள்ளது. (க)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்



வாழ்க்கையில் முன்னேற ஆசைப்படுபவனுக்கு நிறைய எதிர்ப்புக்களும், ஏமாற்றங்களும் ஏற்படுவது இயற்கை. எதிர்ப்பையும் ஏமாற்றத்தையும் கண்டு பயந்து முயற்சி செய்வதையே விட்டு விடுபவன் மற்ற[illegible]ர்கள் சொல்லும் வேலைகளைச் செய்து வரும் சாதாரண ஊழியனாகத் தான் உருவெடுக்கமுடியும்.

சுவாமி விவேகானந்தர்

# யுத்தநிறுத்த உடன்படிக்கை எழுத்தளவில் மட்டுமே உள்ளது

## போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

தரைப்பகுதியில் யுத்த நிறுத்த உடன்படிக்கை கடைப்பிடிக்கப்படாதுள்ளதாக இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் உல்ப் ஹென்றிக்சன் தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலமாக அதிகரித்து வரும் வன்முறைகள் காரணமாக யுத்த நிறுத்தம் எழுத்தளவில் கடைப்பிடிக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற இலங்கை, சுவீடன் நட்புறவுச் சங்கத்தின் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவரிடம் கேள்வி கேட்பதற்கு அனுமதி வழங்கப்பட்டது. அங்கு எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளித்த ஹென்றிக்சன், அண்மைக்காலங்களில் வன்முறைகள் அதிகரித்தன் காரணமாக யுத்த நிறுத்த உடன்படிக்கை கேள்விக் குறியாகியுள்ளது.

நிரந்தர சமாதானத்தை கட்டியெழுப்ப நீண்ட காலம் எடுக்கும் முதலில் போர்நிறுத்தப்படவேண்டும். அதன் பின்னர் நாட்டில் அனைத்துத் தரப்பினரும் ஏற்கக்கூடிய சட்டக் கட்டமைப்பு உருவாக்கப்படவேண்டுமெனவும் உல்ப் ஹென்றிக்சன் தெரிவித்தார்.

இவற்றை நிறைவேற்றினாலும் கூட குறிப்பிட்ட காலத்திற்குள் சமாதானத்தை எட்டுவது முடியாத காரியம் எனவும் குறிப்பிட்ட அவர் சமாதானத்திற்காக இரண்டு, மூன்று சந்ததியினர் அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டியுள்ளதாகவும் கூறினார். (ந-5)

## இலங்கைக்கு உதவும் நாடுகளின் தலைவர்கள் நாளை சந்திப்பு

(டோக்கியோ)

இலங்கைக்கு உதவி வழங்கும் டோக்கியோ மாநாட்டின் இணைத் தலைவர்களின் விசேட பேச்சுவார்த்தை நாளை நடைபெறவுள்ளது.

யப்பான் தலைநகர் டோக்கியோவில் நடைபெறுகின்ற இப் பேச்சுவார்த்தையில் நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக்சொல் ஹெய்ம், யப்பானின் விசேட பிரதிநிதி யசூசிஅகாசி, அமெரிக்காவின் பிரதி இராஜாங்க செயலாளர் ரிச்சட் பௌச்சர், ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகாரங்கள் தொடர்பான பிரதிப்பணிப்பாளர் ஹாபி ஜோன்கீன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இப் பேச்சுவார்த்தையின் போது இலங்கையின் தற்போதைய நிலை தொடர்பாகவும் சர்வதேச ஒத்துழைப்புத் தொடர்பாகவும் ஆராயப்படுமென யப்பான் வெளியுறவுத் துறை அமைச்சு தெரிவித்துள்ளது. (ந-5)

## இந்தியா செல்ல முயற்சித்த 260 பேர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

இவ் வாரத்தில் இந்தியாவிற்கு செல்ல முற்பட்ட 260பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக கடற்படைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். கடந்த வெள்ளிக்கிழமை மாத்திரம் 51 பேர் கைதுசெய்யப்பட்டதாக தெரிவித்த அவர் மன்னார் மற்றும் திருகோணமலை கடற்பகுதியில் வைத்தே இவர்கள் கைதுசெய்யப்பட்டதாக கூறினார்.

இலங்கையில் இருந்து இந்தியாவிற்கு சட்டவிரோதமாகச் செல்வதை தடுக்கும் வகையில் கடற்படையினர் ரோந்துச் சேவையை அதிகரித்திருப்பதாகவும் ஜனவரி மாதம் 12 ஆம் திகதி முதல் இதுவரை ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் இந்தியாவுக்குச் சென்றிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (க-9)

Hatton National Bank

அடகுப் பொருட்களை மீட்டல் / விற்பனைக்கான அறிவித்தல்

எமது கிளைகளான யாழ்ப்பாணம், சுன்னாகம், நெல்லியடி ஆகிய கிளைகளில் அடகு சேவை வசதி பெற்ற வாடிக்கையாளர் கவனத்திற்கு,

நீங்கள் பெற்ற அடகுக் கடனுக்குரிய சீட்டின் மறுபக்கத்தில் குறிப்பிட்ட விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய அடகு வைக்கப்பட்டுள்ள பொருட்களை ஒரு வருட காலத்திற்குள் கடன் செலுத்தப்பட்டு மீட்கப்பட வேண்டும் என்பதனை அறியத்தருகின்றோம்.

உங்களால் பெறப்பட்ட கடனின் முழுப்பகுதியையும் உடனே செலுத்த முடியாவிட்டால் கடனுக்குரிய வட்டியையும் கடனின் ஒரு பகுதியையும் (ரூ. 500) செலுத்தி காலாவதித் திகதியை நீடித்துக் கொள்ளலாம்.

ஒரு வருடத்திற்கு மேற்பட்ட அடகுப் பொருட்களை மீட்க / காலாவதித் திகதியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக்கையாளர்களின் அடகுப் பொருட்கள் ஏலத்தில் விற்பனைக்கு விடப்படும் என்பதனை இத்தால் அறியத் தருகின்றோம்.

முகாமையாளர்

(C-330)

## மூதூரில் கடத்தப்பட்டவர் படுகொலை

(மூதூர்)

திருகோணமலை மூதூர் இறங்குதுறையில் வைத்து வெள்ளை வானில் கடத்திச் செல்லப்பட்ட மாதவராசா சதானந்தன் என்பவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இவரது சடலம் நேற்று காலை 8மணிக்கு மூதூரில் கண்டெடுக்கப்பட்டது. (ந-5)

## இணுவில் பிள்ளையார் தேர்த்திருவிழா

(இணுவில்)

வரலாற்றுப் பெருமை மிக்க இணுவில் பரராஜ சேகரப்பிள்ளையார் கோயில் தேர்த் திருவிழா இன்று நடைபெறுகின்றது.

இன்று காலை 7 மணிக்கு வசந்த மண்டபப்பூசை நடைபெற்று காலை 10 மணிக்கு விநாயகப் பெருமான் தேரில் ஆரோகணிப்பார். நாளை தீர்த்தோற்சவம் இடம் பெறும்.(ந)

## ஊடகவியலாளர் நேற்று விடுதலை

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் வைத்து நேற்று முன்தினம் இராணுவத்தால் கைதுசெய்யப்பட்ட ஊடகவியலாளர் சுரேஷ் நேற்றுக் காலை விடுதலை செய்யப்பட்டார்.

விசாரணையை மேற்கொண்ட யாழ். மாவட்ட மேலதிக நீதிபதி சிறிநிதி நந்தசேகரன் பிரஸ்தாப ஊடகவியலாளரை விடுதலை செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ந-5)

## இனப்பிரச்சினைக்கான...

நடைபெறவுள்ளதாகவும் கூறப்படுகிறது.

அரசும் விடுதலைப்புலிகளும் சந்தித்து பேச்சு நடத்துவதும் அதன் மூலம் தீர்வை எட்டுவதும் சாத்தியப்படாத விடயம் என்பதால் இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டத்தை தாம் தயாரித்து அதை இரு தரப்பையும் ஏற்றுக்கொள்ள வைப்பதே இலங்கை இன விவகாரத்தில் தலையிட்டுள்ள வெளிநாடுகளின் நிலைப்பாடாகும்.

அவ்வகையில் அடுத்தமாதம் 8-ம்,9-ம் திகதிகளில் ஒஸ்லோவில் நடைபெறும் கூட்டத்தில் கண்காணிப்புக்குழுவிற்கு கூடிய அதிகாரங்களை வழங்குவதும் தம்மால் தயாரிக்கப்படும் தீர்வை அரசும் விடுதலைப் புலிகளும் ஏற்றுக்கொள்ள வேண்டுமெனவும் தவறும் பட்சத்தில் உரிய தரப்புக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்துள்ள சர்வதேச அரசியல் அவதானிகள் ஒஸ்லோக்கூட்டத்தில் அரசும் விடுதலைப்புலிகளும் கலந்து கொள்ளா விட்டாலும் இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வை தயாரிக்கும் வெளிநாடுகளின் திட்டத்தில் எந்தவித மாற்றமும் இருக்கமாட்டாது எனவும் கூறியுள்ளனர்.

இதேவேளை நோர்வே அமைச்சர் எரிக்சொல் ஹெய்மின் இந்திய விஜயம் இதன் அடிப்படையிலேயே அமைந்திருந்ததாகவும் தெரியவருகிறது. (ந)

## விண்ணப்பம்கோரல்

கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் பாட நிபுணத்துவக் குழுக்களுக்கு நியமிப்பதற்கான தகைமை பெற்றவர்களிடமிருந்து கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகத்தினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பல்வேறு எழுத்தாளர்களினால் 6ஆம் மற்றும் 10ஆம் தரங்களுக்காக ஆக்கப்பட்ட பாடநூல்களின் மாதிரி பிரதிகளை மதிப்பீடு செய்து பொருத்தமான நூல்களை தேர்ந்தெடுக்கும் பணியே இப்பாட நிபுணத்துவக் குழுக்களின் முக்கிய பணியாகும்.

விண்ணப்பதாரி அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து பெற்றுக் கொண்ட பட்டம் அல்லது விண்ணப்பித்த பாடம்தொடர்பாக அதற்கு சமமான கல்வித்தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அதனுடன் விண்ணப்பிக்கும் பாடம் தொடர்பாக குறைந்த பட்சம் 5வருடங்கள் ஆசிரியராக அல்லது ஆசிரிய ஆலோசகராக அல்லது பல்கலைக்கழக விரிவுரையாளராக கடமையாற்றிய அனுபவம் இருத்தல் வேண்டும்.

சிங்களம் ,ஆங்கிலம், தமிழ் ஆகிய மொழிகளில் ஏதாவதொன்றில் உயர்ந்த தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். குறிப்பிட்ட தகைமைகளை பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகள் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் 'கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம், கல்வி வெளியீட்டுத் திணைக்களம், இசுருபாய', பத்திரமுல்லை' என்ற முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இது குறித்த மேலதிக விபரங்களை பெற விரும்பும் விண்ணப்பதாரிகள் 011 2784 815, 011 2787509, 011 2784813 , 011 2785477 ஆகிய தொலைபேசி இலக்கங்களில் தொடர்பு கொண்டு விபரங்களைப் பெறலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (கு)

நிறைஞ்சனாஸ்

சரத்குமார், மீனா நடித்த

மாஜி

கா.நே: 10.30,2.15,5.30,8.45

நாதவிஸ் சினிமா யாழ்ப்பாணம்

04.05.2006 முதல்

10.30,2.30,6.30,9.30

மாமனிதக் குரங்கொன்றின் நெஞ்சை உருக்கும் கதை கொண்ட சாகசச் சித்திரம்

பீட்டர் ஜக்ஷன்

கிங்கொங்

(KING KONG)

தங்கத்தமிழ் மொழியில். பாடசாலை மாணவர்களுக்கு விசேட சலுகை

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில 29.05.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.